பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 02 சனிக்கிழமை 18.03.2023 கதிர் 129

# சாக்கு போக்கு சொல்லாமல் தேர்தலை உடன் நடத்துங்கள்

## ரணில் ஆட்சியிடம் சம்பந்தன் வலியுறுத்து

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு, உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கே ஏன் இப்படி அஞ்சுகின்றது?**

**- இவ்வாறு கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.**

**உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தப் பின்னடிக்கும் இந்த அரசு, மாகாண சபைத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலை எப்படி நடத்தப் போகின்றது? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.**

2



## ஸ்ரீரங்கா கைது

முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்கா கைது செய்யப்பட்டுள்ளார். களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

முன்னாள்பாராளுமன்ற உறுப்பினர்ஜே.ஸ்ரீரங்காவை கைது செய்யுமாறு பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு வவுனியா மேல் நீதிமன்றம் உத்தரவிட்டதை அடுத்தே குறித்த கைது இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, செட்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்து வழக்கு ஒன்றின் சாட்சியை அச்சுறுத்திய சம்பவம் மற்றும் விபத்து தொடர்பான வழக்கில் ஆஜராகாத சம்பவத்தை அடுத்தே உயர்நீதிமன்றம்இன்றுஇந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

2011ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் திகதி செட்டிகுளம் வைத்தியசாலைக்கு அருகில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்கா பயணித்த பதிவுசெய்யப்படாத வாகனம் விபத்துக்குள்ளானது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் மெய்ப்பாதுகாவலராக இருந்த பொலிஸ்

2

## இது ரகசியம் அல்ல!

60 வயதில் ஓய்வு பெறுவதை தற்போதைய ஆட்சி கட்டாயமாக்கிவிட்டதால் இந்த ஆண்டு பலர் வீடுகளுக்குச் செல்ல வேண்டியயவர்களானார். வடக்கு மாகாண சபையிலும் அது போன்று பலர் வெளியேறி இருந்தார்கள். எனினும் இரண்டு வருட காலத்தில் வடக்கில் உள்ள மூத்த உயர் அதிகாரிகள் பலரும் ஓய்வு பெறவுள்ளனர்.

2023 மற்றும் 2024 ஆண்டிலேயே இவ்வாறு ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளனர். இரு ஆண்டுகளிலும் மொத்தம் 10 நிர்வாக சேவை விசேட தரத்தைச் சேர்ந்த அதிகாரிகள் ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் தலா 5 பேர் ஓய்வு பெறுவர்.

இவ்வாறுஓய்வுபெற்றுச்செல்பவர்களில் 2023ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றுச் செல்பவர்களாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் விமலநாதன் 2023.05.20 இல் ஓய்வுமெறுகிறார். 2023.06.12இல் வடக்கு மாகாண பேரவைச் செயலாளரான இளமதி சபாலிங்கம் ஓய்வு பெறும் அதேநேரம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரான சரஸ்வதி மோகனாதன் 2023.08.23 அன்று ஓய்வு பெறுகின்றார்.

மன்னார் மாவட்டச் செயலர் ஸ்ரான்லி டீமெல் இந்த ஆண்டு நவம்பர் மாதம் ஓய்வு பெற்றுச் செல்வதோடு மாகாண பிரதிப் பிரதம திட்டமிடல் உமாகாந்தன் தற் போது ஓய்விற்கு விண்ணப்பித்துள்ளார்.

2

## மக்கள் தொகை கணக்கெடுப்பு இந்த ஆண்டு

நாட்டின் உத்தியோகபூர்வ மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ளும் பணிகள் இந்த ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கை தொகைமதிப்பு மற்றும் புள்ளி விவர திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.எம்.பி. அனுரகுமார இதுகுறித்து தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில்2012ஆம்ஆண்டின்பின்னர் உத்தியோகபூர்வ மக்கள்தொகைகணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில், மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பான முன்னோடித் திட்டம் தொடங்கப்படவுள்ளது.

2018ஆம் ஆண்டு முதல் இதற்கான செயற் பாடுகளை முன்னெடுக்க முடியாத நநிலை கொரோனா மற்றும் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக ஏற்பட்டது. இந்த நிலையில், புதிய மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கான முன்னோடி செயற்பாடுகளை ஏப்ரல் மாதத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

மே, ஜூன் மாதங்களில் முழுமையானகள நடவடிக்கைகளை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பின்னர் முழுமையான மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அடுத்த ஆண்டில் முன்னெடுக்கப்படும் - என்றார்.

### தனிநபர் வரி அறவீடு தொடர்பில்

## இடைக்காலத் தீர்வாவது வேண்டும் தொழிற்சங்கங்கள் வலியுறுத்து

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு எட்டும் வரையில் இடைக்கால தீர்வொன்றை வழங்க வேண்டும் என்று தொழில்வல்லுநர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தொழில்வல்லுநர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதியின் செயலாளா சமன் ஏக்கநாயக்கவுக்கும் இடையில்வெள்ளிக்கிழமைசந்திப்பு நடைபெற்றது.

திடீரென்று ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்புஜனாதிபதி செயலத்தில் நடைபெற்றிருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், இலங்கை வங்கி ஊழியாகள் சங் கம், பல்கலைக்கழக

2

## ஜே.வி.பியின் எழுச்சிக்கு அஞ்சியே தேர்தலை ஒத்திவைக்கிறார் ரணில்

### அநுரகுமார குற்றச்சாட்டு



ஜே.வி.பியின் எழுச்சியைக் கண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அஞ்சுகின்றார். அதனால் தான் அவர் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாமல் ஒத்திவைக்கின்றார்.

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. குற்றம் சாட்டினார்.

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த வருடம் மார்ச் மாதம் உள்ளூராட்சி சபைகளின் ஆட்சிக் காலம்முடிவுக்குவந்தது. தேர்தலை நடத்தாமல் அமைச்சர் எந்தவொரு காரணமும் இன்றி தேர்தலை ஒரு வருடத்துக்கு ஒத்திப்போட்டார். நாங்கள் அப்போது அதனோடு மோதவில்லை.

2

## புதிய மத்திய வங்கிச் சட்டத்தை எதிர்த்து தேசிய மக்கள் சக்தி மனு

### தனியார் மயப்படுத்தத் திட்டம் எனவும் சாடல்

உத்தேச இலங்கை மத்தியவங்கிச்சட்டத்திற்குஎதிராக தேசிய மக்கள் சக்தி உயர் நீதி மன்றத்தில் மனு வொன்றை தாக்கல் செய்துள்ளது.

உத்தேச இலங்கை மத்திய வங்கிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில், இலங்கை மத்திய வங்கியானது நாடாளுமன்றத்தின் கண்காணிப்பிலிருந்து விடுபடுகின்றது. இந்த நிலைமையானது, மக்களின் இறைமையை மீறும் செயற்பாடாக அமையும் என்று குறித்த மனுவில் தேசிய மக்கள்சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டத்தரணி சுனில் வட்டக்கல, மற்றும் வசந்த சமரசிங்க

2

## போராட்டத்தை திசை திருப்ப அமைச்சர்கள் கடும் முயற்சி

### அடுத்த கட்டத்துக்குச் செல்வோம் என்கிறார் ஸ்டாலின்



தமது போராட்டத்தினை திசை திருப்புவதற்கு அரசாங்கத்தின் அமைச்சர்கள் பலரும் பிரயத்தனம் செய்கின்றனர் என்று குற்றம் சாட்டியுள்ள இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் போராட்டத்தின் அடுத்த கட்டத்துக்குச் செல்லவுள்ளதாகவும் எச்சரிக்கை விடுத்தார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோதுஅவர்இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும்

2

### கொரோனாவின் தாக்கம்

## 90 சதவீதமான தரம் 3 பிள்ளைகளுக்கு எழுத்து மற்றும் இலக்க அறிவு இல்லை

அரச பாடசாலைகளில் தரம் 3இல் கல்வி கற்கும் 90 சதவீதமான மாணவர்களுக்கு எழுத்துகள் மற்றும் இலக்கங்கள் தொடர்பான அறிவு இல்லை என்று கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டஆய்வில்கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த ஆய்வு தொடர்பில் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாணவர்களின்கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுதுதல், அடிப்படைக் கணக்கு தொடர்பான அறிவு போன்றவற்றின் அடிப்படையில், கல்வி அமைச்சினால் இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

அதற்கமைய, தரம் 3 இல் பயிலும் 34 சதவீதமான மாணவர்களுக்கு மாத்திரமே எழுத்தறிவும் 7 சதவீதமான மாணவர்களுக்கு மாத்திரம் எண்கள் தொடர்பான அறிவும்

2

## பிணை வழங்கி 48 மணி நேரம் தாமதமாகவே ஹாதியா விடுவிப்பு

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு தலைமை வகித்தவரும், பிரதான தற்கொலை குண்டுதாரியுமான சஹ்ரான் ஹஷீமின் மனைவியான பாத்திமா ஹாதியாவை வெள்ளிக்கிழமை சிறையில் இருந்து வெளியேறுவதற்கு அனுமதிக்கப்பட்டார்.

நீண்ட நாள்களின் பின்னர் அவருக்கு நீதிமன்றம் பிணை வழங்கியதை ஆடுத்து அவர்

2

## ரணில் ஆட்சியின் கீழ் அமைச்சு பதவி ஏற்கேன்

### நாமல் தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் எந் வொரு பதவியையும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்ஷதெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான பிரதிநிதிகளின் சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களுக்கான ஆயுட்காலம் 19ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகின்றது. அதன் பின்னர் அதிகாரிகளின் கையில் அதிகாரம் செல்லப்போகின்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. மக்களின் பிரதிநிதிகளே ஆட்சி அதிகாரத்தில் இருக்க வேண்டும். அதனை வலியுறுத்துவது தொடர்பில் கலந்துரையாடினோம்.

2

## சஜித் கட்சியின் தேசியப் பட்டியலில் அதிகளவு பேராசிரியர்கள் நியமனம்

### 41 பேரின் பெயர்கள் உள்ளடக்கம்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் அதிகமான பேராசிரியர்கள்தேசியப் பட்டியல்நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கான பட்டியலில் நியமிக்கப்படவுள்ளனர்.

அவர்களின் பெயர்ப்பட்டியலை கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ இப்போதே தயாரித்து வைத்துள்ளார். அதன் அடிப்படையில் 41 பேராசிரியர்கள்சஜித்தின்தேசியப்பட்டியலில் உள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரம் குருநாகலில் ஆரம்பித்து வைக்கப் பட்டபோது அதில் கவனிக்கத் தக்க முக்கிய அம்சம் ஒன்று இருந்தது. அதுதான் 25 பேராசிரியர்கள் அந்த மேடையில் அமர்ந்திருந்தமை.

அப்படியென்றால் சஜித் எப்படிப்பட்ட ஆட்சிஒன்றுக்குத் தயாராகின்றார் என்பதைப் புரிந்துகொள்ளலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தி வட்டாரம் தெரிவிக்கின்றது.

முழுமையான

2

## புதிய பொலிஸ் மா அதிபராக தேசபந்து தெரிவாக வாய்ப்பு

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை 36 ஆவது பொலிஸ் மா அதிபராக நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பரிந்துரைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதிஅலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தப் பரிந்துரையை முன் வைத்துள்ளார்.

தற்போதைய பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன மார்ச் 25ஆம் திகதியுடன் ஓய்வு பெறவுள்ளார்.

புதிய பொலிஸ் மா அதிபர் பதவிக்காக தேசபந்து தென்னகோன், லலித் பத்திநாயக்க மற்றும் அஜித் ரோஹண ஆகியோர் இடையே மும்முனைப் போட்டி காணப்பட்டது. அவர்களில் தேசபந்துவை ஜனாதிபதி பரிந்துரைத்துள்ளார்.

## அதிகரித்த வரி மூலம் பெறப்படும் பணம் அரசியல்வாதிகளை பாதுகாக்கவே செலவு

அதிகமாக அறவீடு செய்யப்படும்வரிப்பணம்அரசியல் வாதிகளை பாதுகாப்பதற்கே பயன்படுத்தப்படுவதாக புத்திஜீவிகள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த ஒன்றியத்தைச் சேர்ந்த பேராசிரியர் அதுலசிறி சமரக்கோன் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக அரசாங்கம் தொழில் வல்லுநர்களிடத்தில் நூற்றுக்கு 36 சதவீதம் வரியை அறவிடுகிறது. அந்த வரியை வைத்து மக்களுக்கு என்ன நிவாரணம் வழங்குகின்றது என்பது பெரிய கேள்வியாகின்றது.

நெருக்கடிகளுக்குஉள்ளாகியுள்ள விவசாயிகளுக்கோ அல்லது நுண்கடன் பெற்றவர்களுக்கோ

2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேபோன்று 2024 ஆம் ஆண்டில் தற்போதைய கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி.றூபவதி கேதீஸ்வரன் 2024.02.13 அன்றும் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன் 2024.03.20 அன்றும், யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் சிவபாதசுந்தரன் 2024.09.18 அன்றும் ஓய்வு பெறுவதோடு தற்போதைய வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளரான திருமதி.ரூபினி வரதலிங்கம் 2024.11.08 அன்றும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரான திருவாகரன் 2024 டிசம்பர் மாதத்துடனும் ஓய்வு பெறுகின்றனர். குறுகிய காலத்தில் இப்படி மூத்த அதிகாரிகள் ஓய்வு பெறுவது ஆளுநருக்குத்தான் மகிழ்ச்சியைக் கொடுக்கும். இங்கிருக்கும் அதிகாரிகளை எல்லாம் தூக்கி மாற்றிவிட்டுப் புதியவர்களைப் போடவேண்டும் என்று விரும்பியவர் அவர். என்ன... இவர்கள் போகும் போது ஆளுநர் இருப்பாரோ என்பதுதான் தெரியாது.

*******

நேற்று யாழ். நகரில் திருவள்ளுவர் சிலை ஒன்று வைக்கப்பட்டது. தபாலகத்திற்கு முன்பாக உள்ள சுற்று வட்டத்தில் அந்தச் சிலை திறந்த வைக்கப்பட்டது. காவி உடை, நெற்றியில் பட்டை என்று ஒட்டுமொத்தமாக சைவப் பழமாக அவரை மாற்றியிருந்தார்கள். உலகப் பொதுமறையாம் திருக்குறளை இந்த உலகத்திற்குத் தந்த மகானை, உலகாளும் தமிழ் மகனை மதச் சட்டகத்திற்குள் அடக்கி என்ன அழகு பார்க்கப் போகிறார்களோ தெரியாது. இந்த நிகழ்வில் கலந்துகொள்ள கிறிஸ்தவரான முன்னாள் மாநகர முதல்வர் ஆனல்ட்டும் அமர்ந்திருந்தார். முன்னாள் மேயர்கள் இருவரும் (ஆனல்ட் மற்றும் மணிவண்ணன்) இருவரும் மேடையில் அன்னியோன்னியமாக உரையாடிக்கொண்டிருந்தார்கள். வாழ்க ஒற்றுமை!

- இடிமின்னல் -

## சாக்கு போக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாக்குக்குப்போக்குக் காரணங்களைக் சொல்லாமல் உள்ளூராட்சிசபைத் தேர்தலை அரசு உடனடியாக நடத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மக்களின் வாக்குரிமையை எவரும் தட்டிப்பறிக்க முடியாது என்றும், மக்கள் ஆணைக்கு வழிவிடுவது அரசின் கடமை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் சுட்டிக்காட்டினார்.

## ஸ்ரீரங்கா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்ஜன்ட் உயிரிழந்த சம்பவம் தொடர்பான வழக்கின் சாட்சி அச்சுறுத்தப்பட்டமை மற்றும் விபத்து தொடர்பான விசாரணைக்காக நீதிமன்றுக்கு வராமல் இருந்தமை போன்ற காரணங்களுக்காக அவரை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்த அமைச்சரவை பாதுகாப்பு பிரிவில் கடமையாற்றிய பொலிஸ்சார்ஜண்ட் அலவ்வை பிரதேசத்தை சேர்ந் தவர் என்பதோடு விபத்து சம்பந்தமாக நடத்திய விசாரணைகளுக்கு அமைய விபத்து நடந்த போது வாகனத்தை ஓட்டியது ஸ்ரீரங்கா என்பதும் தெரியவந்துள்ளது.

அன்றைய நாடாளுமன்ற உறுப்பினரான ஸ்ரீரங்கா, மதவாச்சியில் இருந்து மன்னார் பிரதான வீதி வழியாக மன்னார் நோக்கி சென்ற போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## இடைக்காலத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரிவுரையாளர்கள் சம்மேளனம் உள்ளிட்ட தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக அரச மருத்து அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத் தியர் ஹரித்த அளுத்கே தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு உடன்பாட்டை எட்டும் வரையில் எமது வரி அறவீடு தொடர்பான கோரிக்கையை நிறைவேற்ற முடியாதாயின் நாம் இடைக்கால தீர்வொன்றை வழங்குமாறு வலியுறுத்தியுள்ளோம்.

அரசின் பக்கத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி அவசியமாக உள்ளது. அதனை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அதற்கான உடன்பாடு எட்டப்பட்டு முதற் தொகை கிடைப்பதற்கு ஆகக்குறைந்தது இரண்டு மாதங்கள் தேவைப்படும்.

அக்காலப்பகுதியில் எம்மால் தாங்க முடியாத வரியை சுமக்க முடியாது. ஆகவே குறித்த காலம் வரையில் இடைக்கால தீர்வொன்றை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

அத்துடன் அவ்விதமான தீர்வினை வழங்குவதன் ஊடாகவே அரசாங்கத்தின் மீது எமக்கு நம்பிக்கை ஏற்படும். எமது கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் சாதகமாக பதிலளித்தார். அடுத்த வாரம் ஜனாதிபதியை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்வதாகவும் கூறியுள்ளார் என்றார்.

## புதிய மத்திய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரே இந்த மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

"தேச இலங்கை மத்திய வங்கிச் சட்டம் அமுலாக்கப்படும் போது, மக்களின் இறைமை கேள்விக்குறியாகும். இதனால் இந்தச் சட்டத்தினை அமுக்குவதற்கு உயர்நீதிமன்றம் அனுமதி அளிக்கும் என்று கருதவில்லை. அவ்வாறு அனுமதி அளிப்பதாக இருந்தாலும், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது'' என்றார் சட்டத்தரணி சுனில் வட்டக்கல.

அதேநேரம், வசந்த சமரசிங்க கூறுகையில், மத்திய வங்கியை தனியார் நிறுவனமாக்குவதே ரணில் ராஜபக்ஷ தரப்பின் எண்ணமாகும். ஆதன் மூலமாக ஏனைய வங்கிகளையும் தனியார் மயப்படுத்தி அதன் ஊடாக பரிவர்த்தனைகளை முன்னெடுப்பதே நோக்கமாக உள்ளது.

இது நாட்டின் சொத்துக்களை தனியார் மயப்படுத்தும் சிந்தனையின் அடிப்படையாகும். ஆத்துடன் அவ்வாறு தனியார் மயப்படுத்தப்படுவதன் ஊடாக மத்திய வங்கிக்கு வெளிநாட்டில் உள்ள ஒருவரை ஆளுநராக கூட நியமிக்கும் அபாயமுள்ளது - என்றார்.

## பிணை வழங்கி ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிக்கப்பட்டுள்ளார்.

கல்முனை மேல்நீதிமன்ற நீதிபதி ஜெயராம் ட்ரொஸ்கியின் வியாழக்கிழமை பாத்திமா ஹாதியாவுக்கு பிணை வழங்கப்பட்டது. ஆனாலும் அவர் உடனடியாக விடுவிக்கப்படவில்லை. விளக்கமறியல் கைதியாக அவர் தொடர்ந்தும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்துள்ளார்.

நீதிபதியின் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 48 மணி நேரத்தின் பின்னரேயே சிறைச்சாலையில் இருந்து வெளியேறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தாமதமாகியமைக்கு, கோட்டை நீதிமன்றில் உள்ள பிறிதொரு வழக்கில் அவரை ஆஜர் செய்ய வேண்டும் என்பதால் தொடர்ந்தும் தடுத்து வைத்திருந்ததாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஹாதியாவுக்கு வேறு வழக்குகள் எதுவும் இல்லை எனவும், கோட்டை நீதிமன்றில் இருக்கும் பிஅறிக்கை பிரகாரம் தொடுக்கப்பட்ட வழக்கே கல்முனை மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டதாகவும் பாத்திமா ஹாதியாவின் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், 48 மணி நேரத்தின் பின்னர் அவர் சிறைச்சாலையிலிருந்து வெளியேறுவதற்கு அனுமதிக்கப்பட்டதோடு, தொடர்ந்தும் வழக்கு முன்னெடுத்துச் செல்லப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜே.வி.பியின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை (19) அது முடிகின்றது. இனி அரசமைப்பின்படி - உள்ளூராட்சி சட்டத்தின் படி தேர்தலை நடத்தியாக வேண்டும்.

தேர்தல் வேண்டும் என்பது எங்களது நிகழ்ச்சித் திட்டம் அல்ல. அரசமைப்பின்படி நடத்தியே ஆக வேண்டும். அதுதான் ஜனநாயகம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்தாமல் ஒத்தி வைப்பதற்கான காரணம் பணம் இல்லாமை இல்லை. ஜே.வி.பியின் எழுச்சியைக் கண்டே அவர் அஞ்சுகின்றார். அதைத் தடுக்க அவர் முயற்சிக்கின்றார். - என்றார்.

## போராட்டத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

நாம் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தினை அமைச்சர்கள் திசை திருப்பவே முனைகின்றனர். நாம் வரி அதிகரிப்புக்கு எதிராக மட்டும் போராடவில்லை. ஆனால் அமைச்சர் அலி சப்ரியும், மஹிந்தானந்தவும் அவ்வாறு காண்பித்து எம்து போராட்டத்தினை திசைதிருப்ப முயற்சித்துள்ளனர்.

உண்மையில் நாம் வரிச்சுமையால் பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்குமாகவே போராடினோம். அதேநேரம் ஆசிரியர்களுக்கு 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அதிகரிப்பு வழங்குமாறே நாம் வலியுறுத்துகின்றோம். இந்த தெளிவின்மையால் அவர்கள் எம்மை விமர்சிக்கின்றார்கள். எமக்குரிய தீர்வு கிடைக்காது விட்டால் நாம் அடுத்தகட்டத்திற்குச் செல்வோம் - என்றார்.

## ரணில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆத்துடன் நாம் தேர்தலுக்கு தாயராகவே உள்ளோம் -என்றார்

அதேநேரம், அமைச்சரவை மாற்றம் இடம் பெறுகையில் நீங்கள் பதவியேற்பீர்களா என்று வினவப்பட்டபோது, நான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் எந்தவொரு அரசாங்கப் பதவியையும் ஏற்கப்போது இல்லை. அதில் உறுதியவே இன்றும் உள்ளேன் - என்றார்.

## 90 சதவீதமான ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

பாடசாலைகள் மூடப்பட்டிருந்த காலப்பகுதியில் 26 சதவீதமான மாணவர்கள் இணையவழி கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடவில்லை. கொரோனா பெருந்தொற்றினால் பாடசாலைகள் மூடப்பட்டமையால் மாணவர்களுக்கு இந்தப் பின்னடைவான நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சஜித் கட்சியின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்ல கல்விமான்களை உள்ளடக்கிய அரசு ஒன்றை அமைப்பதற்கே அவர் தயாராகி வருகின்றார் என்று அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## அதிகரித்த வரி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்விதமான சலுகைகளையும் அரசாங்கம் வழங்கவில்லை. விவசாயிகள் பயிர்ச்செய்கை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். ஆனால் அதனை அரசாங்கம் செய்யவில்லை.

அதுமட்டுமன்றி, மின்சாரக் கட்டணம், நீர்க் கட்டணம் ஆகியன அதிகரிக்கப்பட்டுள்ளமையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக அதிகரித்த வரி மூலம் கிடைக்கும் பணத்தைப் பயன்படுத்த முடியும். ஆனால் அரசாங்கம் அதனையும் செய்யவில்லை. வெறுமனே மோசடிகள் நிறைந்த அரசியல்வாதிகளை பாதுகாப்பதற்கே அந்த வரிப்பணம் பயன்படுத்தப்படுகின்றது - என்றார்.


விளம்பரத் தொடர்புகளுக்கு – தொலைபேசி இலக்கம் 076 443 8622






காலைக்கதிர் Kalaikkathir

திருட்டுக் குற்றச்சாட்டில்

# இளைஞர் குழு ஒன்றை நையப்புடைத்த மக்கள்





யாழ்ப்பாணம், மார்ச் 18

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைநகர் கோவளம் பகுதியில் வெள்ளிக்கிழமை மாலை இளைஞர் குழு ஒன்றை மடக்கிய கிராம மக்கள் அவர்களை - நன்கு கவனித்த - பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். ஈடுபட்ட ஐவர் அடங்கிய கும்பல் ஒன்று அப்பகுதி மக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு நையப் புடைக்கப்பட்ட பின்னர் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சுழிபுரம் பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த ஐவர் அடங்கிய இளைஞர் குழு ஒன்றே பிடிக்கப்பட்டது. காரைநகர் கோவள பகுதியில் உள்ள வீடுகளில் உள்ள வீட்டு நிலைகளை இந்தக் குழு திருடிய சந்தர்ப்பத்தில் அவர்களை மடக்கிப் பிடித்ததாக மக்கள் தெரிவித்தனர்.

காரைநகர் மணற் காடு அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தில் வெள்ளிக்கிழமை கோவளப்பகுதி மக்களின் திருவிழா இடம் பெற்றது. இதனால் கிட்டத்தட்ட கிராமமே திருவிழாவிற்குச் சென்ற சமயத்தில் வீடுகளில் கதவி நிலைகளைத் திருடினார்கள் இவர்கள் என்பது மக்களின் குற்றச்சாட்டு.

பிடிக்கப்பட்டவர்களில் ஒருவர் காரைநகர் பகுதியை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது

# திருவள்ளுவர் திருவுருவச்சிலை யாழ். நகர் மையத்தில் திறப்பு







யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் பிரதான தபாலகத்திற்கு முன்பாகவுள்ள சுற்று வட்டத்தின் நடுவே திருவள்ளுவரின் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சுற்று வட்டத்தினை மீளமைத்து அழகுபடுத்தும் பணியை ரில்கோ சொகுசு விடுதி மேற் கொண்டது. சுற்று வட்டத்தின் நடுவே திருவள்ளுவர் திருவுருவச்சிலையை பிரதிஷ்டை செய்வதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் கடந்த வருடம் மே மாதம் 29 ஆம் திகதி நடைபெற்றது.

இந்தநிலையில் நேற்றுமாலை 6 மணிக்கு திருவள்ளுவரின் சிலை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இன்றைநிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபால சுந்தரன், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, இந்திய துணைதூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்.மாநகர சபையில் முன்னாள் முதல்வர்களான இ.ஆனல்ட் மற்றும் வி.மணிவண்ணன், யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.ஜெயசீலன், மத குருமார்கள், பேராசிரியர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், யாழ்.வணிகர் கழகத்தினர், தொழிலதிபர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

குறித்த அபிவிருத்திச் செயற்றிட்டம் ரில்கோ தனியார்விடுதியின் உரிமையாளர் திலகராஜின் நிதிப் பங்களிப்பில் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்று பொது தகவல் தொழில்நுட்பப் பரீட்சை

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பொது தகவல் தொழில்நுட்பப் பரீட்சை இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

2019, 2020, 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் தரம் 12 இல் கல்வி கற்ற மாணவர்களுக்காக இந்தப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இதற்கமைய, நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 269 பரீட்சை மத்திய நிலையங்களில் இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 12.10 வரை பொது தகவல் தொழில்நுட்பப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாது போன பாடசாலை பரீட்சார்த்திகளுக்கு 2023 ஆம் ஆண்டில் தரம் 12 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்காக நடத்தப்படும் பொது தகவல் தொழில்நுட்பப் பரீட்சையின் போது, தமது பாடசாலைகளின் ஊடாக மீள விண்ணப்பிக்க முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

# அடுத்த கட்ட நகர்வு குறித்து 'மொட்டு' மந்திராலோசனை

பஸிலின் தலைமையில் நேற்று



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவுக்கும் அக்கட்சியின் உள்ளூராட்சி சபைகளின் பிரதானிகளுக்கும் இடையிலான சந்திப்பு மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் மேதினக் கூட்டம் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது.

மொட்டுக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம், நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, ரோஹித அபேகுணவர்த்தன உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

# மைத்திரிபாலவின் ரிட் மனு ஜூலையில் விசாரணைக்கு



2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத்தாக்குதல் தொடர்பில் தமக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள தனிப்பட்ட முறைப்பாட்டைச் சவாலுக்கு உட்படுத்தி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்த ரிட் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஐவர் அடங்கிய அமர்வு ஜூலை 31 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் ஏ மரிக்கார் ஆகியோர் அடங்கிய இரு உறுப்பினர் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள தனிப்பட்ட மனு மீதான விசாரணையை 10 வாரங்களுக்கு ஒத்திவைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்துக்கு முன்னர் உத்தரவிட்டிருந்தது.

இந்த விவகாரம் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்த ரிட் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் பரிசீலித்த போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை முன்னரே புலனாய்வுத் தகவல்கள் இருந்தும் தடுக்க முடியாமல் போனதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாடு தொடர்பில் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு தம்மை அழைப்பாணை விடுத்த நோட்டீசை இடைநிறுத்துமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது மனுவின் மூலம் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர் மற்றும் புனிதர் சிறில் காமினி ஆகியோர் செய்த முறைப்பாட்டைப் பரிசீலித்த கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம், பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள மைத்திரிபால சிறிசேனவை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

செவிவழிச் செய்திகளின் அடிப்படையில் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக மைத்திரிபால சிறிசேன ரிட் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி சாட்சியங்களின் அடிப்படையில் நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் விடுத்த அழைப்பாணை சட்டத்துக்கு முரணானது எனவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, தனக்கு எதிராகக் கோட்டை நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வரும் வழக்கை இடைநிறுத்தி இடைக்கால உத்தரவைப் பிறப்பிக்குமாறும், அழைப்பாணை செல்லுபடியற்ற உத்தரவு பிறப்பிக்குமாறும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்படி இந்த வழக்கு ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் ஐவர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நெருக்கடியின் உச்சத்தை தொட்டாயிற்று இனியாவது தீர்வுக்காக ஒன்றிணையுங்கள்

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதை தனியொரு மனிதனாக அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆற்ற முடியாது. அதற்கு அனைத்துத் தரப்பினரது ஒத்துழைப்பும் அவசியம். ஒரு தலைப்பட்சமாக எடுக்கப்படும் முடிவுகள் முதலுக்கே மோசமான பதில் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை தொழிற்சங்கப் போராட்டங்கள் உணர்த்தியிருக்கின்றன. பொருளாதார மீட்சிக்குப் பதில் பொருளாதார நெருக்கடியை இத்தகைய போராட்டங்கள் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கின்றன.

இந்தப் போராட்டங்கள் உடனடியாக முடிவுக்கு வருவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரியவில்லை. பங்குனி 20 பன்னாட்டு செலாவணி நிதிய (ஐஎம்எவ்) பணிப்பாளர் சபை அங்கீகரித்ததும் முதற்கட்டமாக 2.9 மில்லியன் டொலர் கடனுக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்று இலங்கை அரசு எதிர்பார்க்கின்றது. எனவே தொழிற்சங்கங்களின் போராட்டத்தை அதுவரையில் ஒத்தி வைக்கக்கூடிய காய் நகர்வை அது மேற்கொண்டது. ஆனால், ரணிலின் ராஜதந்திரங்கள் குறித்து நன்கறிந்திருக்கும் தொழிற்சங்கங்களும் சும்மா இருப்பதாக இல்லை குறைந்தபட்சம் இடைக்காலத் தீர்வையாவது தருமாறு அவை இப்போது – வலியுறுத்தத் தொடங்கியுள்ளன.

அதாவது செலாவணி நிதியக் கடன் கிடைக்கும் வரைக்கும் தமது வாயை மூடிக் கொண்டிருப்பதற்கு தனிநபர் வரி அறவீட்டில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னரான தளர்வு அல்லது சம்பளப்படி உயர்வு போன்ற ஏதாவது ஒன்றை அறிவிக்குமாறு கேட்கின்றன. அப்படி அறிவித்தாலும் அரசு செலாவணி நிதியத்திடம் மாட்டிக்கொள்ளும். ஏனெனில் கடன் வழங்கும்வரை ஆமாம் போட்டுவிட்டு அதன் பின்னர் தலைகீழாக எல்லாவற்றையும் மாற்றிவிடும் இலங்கையின் பண்பு குறித்து நிதியத்திற்கும் பல அனுபவங்கள் உண்டு. எனவே அது குறித்து எச்சரிக்கையுடனான அணுகுமுறையையே நிதியமும் கொண்டிருக்கும்.

அதனால் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் என்பது அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டால் மட்டுமே முழு வெற்றியடையும். தனியொரு நாயகனாக நாட்டை இந்தப் பிரச்சினையிலிருந்து காப்பாற்றிவிடும் துடிப்பில் எல்லாவற்றையும் போட்டுடைத்து விடக்கூடாது. ஏனெனில் பொருளாதார நெருக்கடியின் உச்சத்தை நாடு தொடத் தொடங்கிவிட்டது.

யாழ்ப்பாணத்தில் பச்சிளங்குழந்தை ஒன்று போசாக்கின்மையால் உயிரிழந்திருக்கிறது. அதன் தாயிடம் போதிய போசாக்கில்லாததும் பால்மா போன்றவற்றை வாங்கிக் கொடுக்கும் பொருளாதாரம் இல்லாததுமே அந்தக் குழந்தையின் போசனை மட்டக் குறைவுக்குக் காரணம். அதேபோன்று மலையகத்தில் போசனைக் குறைபாடு காரணமாக மக்கள் வேலைக்குச் செல்லாது வீடுகளிலேயே தூங்குகிறார்கள் என்கிற செய்திகள் வரத் தொடங்கியிருக்கின்றன. சாப்பாடு கிடைக்காமல் பசியைக் கடக்க அவர்கள் வீடுகளிலேயே தூங்கிவிடுகிறார்கள் என்கிறது அந்தச் செய்திகள்.

இவையெல்லாம் பொருளாதார நெருக்கடியின் உசம் தொடப்பட்டிருப்பதற்கான அறிகுறிகள். அதனைத் தீர்ப்பதற்கு மிகப் பொருத்தமான பொறிமுறை ஒன்று கையாளப்படவில்லையாயின் அது பெரும் விளைவை, உயிர்க் காவுகளை கொண்டுவரும் என்பதற்கான அறிகுறிகளே இவை எல்லாம். அரச தலைவர் சிந்தித்துச் செயற்படவேண்டும். பிரச்சினையைத் தீர்க்க பொருத்தமான பொறிமுறைக்குச் செல்லவேண்டும்.

# மாணவர்களுக்கு இலவசமாக அரிசி வழங்க புரிந்துணர்வு உடன்படிக்கை




மலையகபகுதிகளில் உள்ள ஆரம்பக் கல்வி பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக அரிசி வழங்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) கைச்சாத்திடப்பட்டது.

அரச சார்பற்ற நிறுவனமான 'குட் நெய்பர்ஸ் இன்டர்நேனல்' இந்தத் திட்டத்துக்கான பங்களிப்பை வழங்குகின்றது.

இதன்படி மலையகத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஆரம்ப பிரிவு பாடசாலைகளுக்கு ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி வழங்கப்படவுள்ளது.

புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். இரு தரப்புக்கும் இடையிலான உடன்படிக்கையே இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் தலைமையின் கீழ் அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, மாணவர்களின் இடைவிலகளைத் தடுப்பதற்காகவும், அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடனே இந்தத் திட்டம் ஆரம்பமாகின்றது.

அதேவேளை, மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களில், இலவச சத்துணவு வேலைத்திட்டமும் சிறார்களுக்காக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்கான வேலைத் திட்டத்தையும் உலக வங்கி உதவியுடன் ஜீவன் தொண்டமான் முன்னெடுத்தார் என்பது மேலும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அமைச்சர் ஜீவன் தொண்டமான், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், அமைச் சரின் அதிகாரிகள், புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி கள், அரச சார்பற்ற நிறுவனத்தின் 'குட் நெய்பர்ஸ் இன்டர்நேனல்' முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# உயர்தர மாணவர் உரிமைக்குக் குரல்கொடுக்க எவருமே முன்வராதமை கவலையளிக்கின்றது

## கல்வி அமைச்சர் சுசில் கூறுகிறார்



ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கையால் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ள உயர்தர மாணவர்களின் உரிமைகள் மீறப்படுகின்றமை தொடர்பில் குரல் கொடுப்பதற்கு எந்தவொரு அமைப்புக்களும் முன்வராதமை கவலைக்குரியது.

அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்க பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அப்பால், சமூக பொறுப்பை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமையளிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

பாடசாலைகள் மூடப்பட்டால் சிறைச்சாலைகள் திறக்கப்படும் என்ற கருத்து சமூகத்தில் வியாபித்து வருகிறது. இன்று வாக்குரிமை கூட இல்லாத தமது உரிமைகளைக் கோரி குரல் கொடுக்காத 41 லட்சம் பாடசாலை மாணவர்களுக்காகக் குரல் கொடுப்பதற்கு எவரும் முன்வரவில்லை.

பொருளாதார நெருக்கடிகள் அனைவருக்கும் பொதுவானவை. எனினும் அதற்காக மாணவர்களை பட்டினியால் வாடச் செய்யாது, மேலதிக வகுப்புக்களுக்கு அனுப்பி வைத்து 13 ஆண்டுகள் தமது பிள்ளைகளுக்கு கல்வியை வழங்கிய பெற்றோருக்கு, அந்த பிள்ளைகளின் வாழ்வின் திருப்புமுனையாக அமையும் உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் கால வரையறையின்றி காலம் தாழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் பெரும்பாலானவர்கள் மின் துண்டிப்பால் அசௌகரியங்களுக்கு உள்ளாகி, நேரத்துக்கு உணவு உண்ணாது பெரும் சிரமங்க ளுக்கு மத்தியில் தம்மை தயார்ப்படுத் தினர். எனவே, மாணவர்க ளின் நலன் கருதி தொழிற் சங்க கடமைகளை நிறைவேற்றுவதற்கு அப்பால், சமூகப் பொறுப்புக்களை ஆசிரியர்கள் நிறைவேற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன். - என்றார்.

# மொட்டுவின் 235 தவிசாளர்கள் நாளை வீட்டுக்குச் செல்வார்கள்

நாட்டில் நாளை 19ஆம் திகதியுடன் உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி முடிவுக்கு வருகின்றது. அதற்கமைய மொட்டுக் கட்சியின் தவிசாளர்கள் 235 பேரும், பிரதி தவிசாளர்கள் 235 பேரும் நாளை வீட்டுக்குச் செல்வர்.

அதேபோல் அக்கட்சியின் உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் 3 ஆயிரத்து 646 பேரும் வீடு செல்வர்.

மேலும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 844 பேரும், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் 1,564 பேரும், ஜே.வி.பி. உறுப்பினர்கள் 436 ஆகியோரும் வீடு செல்வர்.

# இருவர் கைது



தென்மராட்சி, மார்ச் 18

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களுக்கு மிரட்டல் விடுத்த இருவர் வெள்ளிக்கிழமை காலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்பாக மேற் படி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் திருத்த வேலை இடம்பெற்றபோது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் எரிபொருள் கேட்டுள்ளனர். விநியோகிக்கக்கூடிய நிலை இல்லை என்று தெரிவித்ததை அடுத்து அச்சுறுத்தல் விடுத்துவிட்டுச் சென்றிருந்தனர்.

இந்நிலையில் சி.சி.ரி.வி கமராவினை ஆதாரமாக கொண்டு இது தொடர்பாக வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் நல்லூர் மற்றும் அரியாலைப் பகுதியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டிருப்பதுடன்,

மிரட்டல் விட பயன்படுத்திய மோட்டார்சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றி மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வாள் வெட்டில் காயமடைந்தவரை நேரில் சென்று பார்த்த சித்தர் எம்.பி.





யாழ்ப்பாணத்தில் வாள் வெட்டுத்தாக்குதலுக்குள்ளாகி யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினரை நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

காயமடைந்தவரின் லைமைகள் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தியோடும் நாடாளுமன்ற உறுப்பினர் கலந்துரையாடினார்.

நேற்று இரவு ஆலய திருவிழாவிற்கு சென்று வீடு திரும்பிய பிரதேச சபை உறுப்பினர் மற்றும் அவரது மனைவி ஆகியோரை கொள்ளையர்கள் வழிமறித்து நகைகளைக் கொள்ளையிட முயன்றபோது நடந்த இழுபறியில் கொள்ளையர்களின் வாள்வெட்டுக்கு இலக்காகி கணவனும் மனைவியும் காயமடைந்தனர்.

இந்த வாள்வெட்டு தாக்குதலில் வலி கிழக்கு பிரதேசசபை உறுப்பினரான இராசேந்திரம் செல்வராசா வயது 59 அவரது மவையான செல்வராசா கமலாதேவி வயது 49 ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். - கிளி. மாவட்டத்துக்கான உவர்நீரைக் குடிநீர் ஆக்கும் திட்டம்!

## அமைச்சர் டக்ளஸ் நேரில் ஆராய்வு






யாழ்பாணம், மார்ச் 18

வடமாராட்சி, தாளையடி கிராமத்தில் உருவாக்கப்பட்டு வருகின்ற யாழ் - கிளிநொச்சி மாவட்டங்களுக்கான உவர்நீரை குடிநீராக மாற்றும் திட்டத்தின் வேலைத் திட்டங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டு, மேற்படி திட்டத்தை செழுமைப்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

ஆசிய அபிவிருத்தித் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில் பிரான்ஸ் நாட்டை தலைமையகமாகக் கொண்டு சூய்ஸ் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டு வருகின்ற உவர் நீரை குடிநீராக்கும், தாளையடி குடிநீர் திட்டத்தின் கட்டுமானப் பணிகளை வெள்ளிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகின்ற சூயஸ் நிறுவனத்தின்கள அதிகாரிகள் உட்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் சுமார் 14 ஆயிரத்து 559 மில்லியன் ரூபா நிதியுதவியில் உருவாக்கப்பட்டு வருகின்ற இந்தத் திட்டத்தின் மூலம் நாளாந்தம் சுமார் 2 கோடியே 40 லட்சம் லீற்றர் குடிநீர் உற்பத்தி செய்யப்பட்டு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் வேலைத் திட்டங்கள் இந்த வருட இறுதியில் நிறைவடையும் என்று எதிர் பார்க்கப்படுவதுடன் முதல்கட்டமாக மீசாலை வரையான கிராமங்களுக்கு குடிநீர் விநியோகத்தை ஆரம்பிப்பதற்கும் தொடச்சியாக ஏனைய பிரதேசங் களுக்கு விநியோகத்தை விஸ்தரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே தாளையடி குடிநீர் திட்டத்தின் சமூக பாதுகாப்பு பங்களிப்பு திட்டத்துக்கு அமைவாக வடமாராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாசத்துக்கு வழங்குவதற்காக 58 லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டு வருகின்ற ஐஸ் தொழிற்சாலையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டார்.

குறித்த ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை மூலம் நாளொன்றிற்கு 5 ஆயிரம் கிலோ கிராம் ஐஸ் கட்டிகளை உற்பத்தி செய்ய முடியும் என்பதுடன், ஐஸ் உற்பத்திக்கான மின்சாரத்தினை பெற்றுக்கொடுப்பதற்கான சூரிய கலங்களும் பொருத்தப்பட்டுள்ளமையினால் குறைந்த செலவில் ஐஸ் கட்டிகளை கடற்றொழிலாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பெண்களுக்கு முக்கியத்துவம் - சம உரிமை கொண்ட சபையாக வலி.மேற்கு பிரிதேசசபை செயற்பட்டுள்ளது!


இறுதி அமர்வில் பெண் உறுப்பினர்கள் பாராட்டு

பெண்களுக்கு முக்கியத்துவம் சம உரிமை கொண்ட சபையாக வலிமேற்கு பிரிதேச சபை செயல்பட்டுள்ளது. இது வேற எந்த சபையிலும் இடம் பெறவில்லை.

இதற்கு ஒத்துழைப்பு நல்கிய தவிசாளர், செயலாளர் உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் என வலிமேற்கு பிர தேச சபையின் பெண் உறுப்பினர்கள் தெரிவித்தார்கள்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் இறுதி கூட்டம் வியாழக்கிழமை காலை தவிசாளர் நடனேந்திரன் தலை மையில் நடைபெற்றது.

உள்ளூராட்சி சபையின் 61 ஆவது சபை கூட்டமும் இறுதி கூட்டமும் நடைபெற்றபோது கடந்த ஐந்து ஆண்டுகளில் இடம்பெற்ற அமர்வுகள், செயற்பாடுகள் தொடர்பாகவும் உறுப்பினர்கள் உரை இடம்பெற்ற போதே அவர்கள் இதனைத் தெரிவித்தார்கள்.

மேலும் அவர்கள் உரையாற்றும்போது -

பல உள்ளூராட்சி மன்றங்களில் கூட்ட அமர்வுகள் நடைபெற்ற போது பெண்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படாததும் அவர்களது கருத்துக்கள் உங் வாங்கப்படாது அறிக்கையில் இணைக்கப்படாத நிலை காணப்பட்டது.

இது பெண் உறுப்பினர்களது கருத்துக்களின் வெளிப்பாடாகும் ஆனால் எமது வலிமேற்கு பிரதேச சபையில் பெண் உறுப்பினர்களுக்கு அனைத்து வழிவகைகளிலும் முன்னிரிமையும் சம உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

எந்தவகையிலும் பின் தள்ளப்பட்ட சந்தர்பமோ உதாசினம் செய்யப்பட்ட நிகழ்வுகளோ இடம்பெறவில்லை. இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய தவிசாளர் நடனேந்திரன், சபை செயலாளர் பாலறுபன் ஆகிய இருவருக்கும் ஏனைய உறுப்பினர்கள், உத்தியோகத்தர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் எமது சபையே ஏனைய சபைகளுக்கு முன்னோடியாக விளங்கியுள்ளது. அடுத்துவரும் ஆட்சியில் யார் வருவார்களோ தெரியாத நிலையில் எமது ஆட்சியின் இடம்பெற்ற விடயங்கள் அடுத்த புதிய சபைக்கு முன்னேற்பாடான எடுத்துகாட்டாக அமையும் என்றார்கள்.

# ஹெரோயினுடன் மூவர் மாளிகாவத்தையில் கைது!

கொழும்பு, மார்ச் 18

மாளிகவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆர்.பீ. தோட்டத்துக்கு அருகிலுள்ள பகுதியில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனைகளில் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவார்களில் ஒருவரிடமிருந்து 5 கிராம் 630 மில்லி கிராமும், ஏனைய இருவரிடமிருந்துதலா 5 கிராம் 100 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் 34,40,45 வயதுடைய மாளிகாவத்தை மற்றும் கொழும்பு -14 பிரதேசங்களை சேர்ந்தவர்களாவர்.

சந்தேக நபர்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) மாளிகாகந்த மஜிஸ்திரேட் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

# பொறியாளர் வீட்டில் நகை திருட்டு பணிப்பெண் உட்பட இருவர் கைது

சிலாபம் பிரதேசத்தில் வசிக்கும் ஓய்வுபெற்ற பொறியியலாளர் ஒருவரின் வீட்டில் பணிபுரிந்து வந்த பணிப்பெண் ஒருவர் அந்த வீட்டிலிருந்த 14 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை திருடி விற்பனை செய்தமை தொடர்பில் சிலாபம் தலைமையக பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

சந்தேக நபரான பணிப்பெண் தவிர, அவருக்கு உதவியதாகக் கூறப்படும் மற்றுமொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

75 வயதானஓய்வுபெற்ற பொறியியலாளர் தனது மனைவி மற்றும் குழந்தையுடன் இந்த வீட்டில் வசித்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பாடசாலைப் பிரதி அதிபர் கைது நிர்வாணப் படம் அனுப்பினாராம்

அத்தனகல்ல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் 11 ஆம் வருட மாணவி ஒருவருக்கு தனது நிர்வாண புகைப்படங்களை வட்ஸ அப் ஊடாக அனுப்பியதாக கூறப்படும் பாடசாலையின் பிரதி அதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என கம்பஹா பிரிவு சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் தெரிவித்துள்ளது.

47 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்ஸ் அப் செயலி மூலம் மாணவியிடம் தனது நிர்வாணத்தை காட்டுவது மட்டுமின்றி, பாடசாலை நாள்களில் அந்த மாணவியை அலுவலகத்துக்கு வரவழைத்து பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கியமையும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# லிஸ்டீரியா நோயால் பெண்ணொருவர் சாவு

சிவனொளிபாதமலைக்கு செல்லும் ஒரு வழியில், சிறிய கடை ஒன்றை நடத்திச்சென்ற பெண் ஒருவர், லிஸ்டீரியா நோயால் உயிரிழந்துள்ளார்.

சுகாதாரத்துறையால் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் லிஸ்டீரியா நோயால் பாதிக்கப்பட்ட, நோய் அறிகுறிகள் தென்பட்டதை அடுத்து, கடந்த மாதம் 23 ஆம் திகதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதன்போது, அவருக்கு லிஸ்டீரியா நோய் தொற்றியுள்ளமை, ஆரம்ப பரிசோதனைகளில் உறுதியானதாக சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்தியர் ரஞ்சித் பட்டுவந்துடாவ தெரிவித்துள்ளார்.

சிவனொளிபாதமலைக்கு செல்லும் ஒரு வழியில், வைரஸ் தொற்று காரணமாக இருவர் உயிரிழந்ததாக, சமூக வலைதளங்களில் வெளியான தகவலை சுகாதாரத்துறை உறுதிப்படுத்தவில்லை என சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிகிரி கொப்பேகடுவ முன்னதாகத் தெரிவித்திருந்தார்.

சிவனொளிபாதமலை வனப்பகுதியில் உள்ள சிறிய கடை ஒன்றில் பணியாற்றும் பெண் ஒருவரும், யாத்திரையில் ஈடுபட்டிருந்த சிறுமி ஒருவரும், வைரஸ் தாக்கம் காரணமாக உயிரிழந்தார் எனக் குறித்த தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள சமூக வைத்திய நிபுணர் சங்கத்தின் ஊடக இணைப்பாளர் வைத்தியர் நவீன் டி சொய்சா, இது தொடர்பான பரிசோதனைகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றமையால், தேவையற்ற அச்சம்கொள்ள வேண்டாம் என பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்

**1. உரலார் கேள்வி:-** நாட்கணக்கில் முடியப்போகிற மாநகரசபை 'மேயர்' பதவிக்கு நம் தமிழ்க்கட்சிகள் அடிபட்ட விதத்தைப் பார்த்தீர்களா?

**உலக்கையார் பதில்:-** பார்த்தேன்! பார்த்தேன்! நமது தலைவர்களின் பதவி மோகத்திற்கான அடையாளம்தான் அது. 'பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்' என்பார்கள். பதவி என்றால் எரித்த, புதைத்த பிணங்களும்கூட வாய்திறக்கும் போல. இந்தச் சிலநாட் சிறுபதவிக்காக சாதி, மத செல்வாக்குகளையெல்லாம் கொண்டு வந்து புகுத்தி, இனத்தைச் சிதைக்க நினைக்கும் தலைவர்களை 'கழுவில்' ஏற்ற வேண்டும்!

**சல்லடையாரின் சலிப்பு** * என்னத்தைச் சொல்ல? மக்களுக்காகப் பாடுபடப் போகிறார்களாம்! நல்ல 'முசுப்பாத்தி' தான் இது பாருங்கோ.

**2. உரலார் கேள்வி:-** என்ன? வரவர ஜனாதிபதி ரணிலைப் புகழ்ந்து தள்ளுகிறீர்கள். ஏதாவது பதவிபெறும் நோக்கமா?

**உலக்கையார் பதில்:-** இப்போது எனக்கிருக்கும் பதவியைவிட உயர்ந்த பதவிகள் எதையும் எவராலும் எனக்குத் தரமுடியாது. எனவே உங்களது குறுக்குப் புத்தியைக் கொஞ்சம் அடக்கிவிட்டு, நான் சொல்லும் காரணத்தைப் பொறுமையாய்க் கேளுங்கள்.

புத்திசாலிகளைவிட நல்லவர்களைத்தான் எனக்குப் பிடிக்கும். அதில் சந்தேகம் இல்லை. ஆனால் புத்திசாலிகளின் தேவையும் தவிர்க்கமுடியாததேயாம். இந்த நாடு ஆபத்தின் விளிம்புவரை வந்த நிலையில், தாம்தான் மக்கள் ஆதரவுபெற்ற தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் நாட்டைவிட்டு ஓடினார்கள். மற்றொருபக்கம்; கிளர்ச்சியாளர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொண்டவர்கள், ஓர் எல்லைக்குப் பிறகு, வன்முறையாளர்களாகமாறி, தாம் எதைப் பெறவிரும்புகிறோம் என்று தெரியாத நிலையில் மேலும் நாட்டைஅழிவுப்பாதையில்நகர்த்த முயன்றார்கள். இப்படிப்பட்ட பெருங் குழப்பமான சூழ்நிலையில்த்தான் ரணில் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார்.

டீசல் இல்லை!, பெற்றோல் இல்லை!, மண்ணெண்ணெய் இல்லை!, காஸ் இல்லை! என்று 'இல்லைகளின்' பட்டியல் அடுக்கப்பட்டுக் கொண்டிருந்த நிலையில், பதவியேற்ற ரணில், சிலதினங்களுக்குள்ளேயே முக்கியமான 'இல்லைகள்' அனைத்தையும் இருக்கும்படியாய்ச் செய்து காட்டி அதிசயிக்க வைத்தார். அவரது அந்தப் புத்திசாலித்தனத்தை எப்படிப் பாராட்டாமல் இருக்க முடியும்.

இப்போது நம் நாடு இருக்கும் நிலையில், அதனைக் காக்க ரணிலைப் போன்ற ஒரு புத்திசாலி அவசியமாகிறார். அதனால்த்தான் புத்திசாலியான ரணிலைப் பாராட்டுகிறேன். நாடு சீரான நிலைக்கு வந்துவிட்டபிறகு நல்லவர்களைத் தேடி நிச்சயம் பாராட்டுவேன். (நம் அரசியலில் அப்படியாரும் இருக்கிறார்களா என்ன?)

இன்னொன்றையும் இவ்விடத்தில் சொல்லவேண்டும்.

இன்றைய நம் நாட்டின் நிலைதான் நம் இனத்திற்கும் வந்திருக்கிறது. போரால் சரிந்து கிடக்கும் நம் இனத்தை நிமிர்த்த, ரணிலைப் போன்ற ஒரு புத்திசாலிதான் இப்போது நம் இனத்திற்கும் தேவைப்படுகிறார். இப்போது நமக்குள் இருக்கும் அத்தகைய புத்திசாலிகளை நான் பாராட்டினால், நான் அவர்களது ஆதரவாளன் என்றும் அவர்களை வளர்க்க நினைக்கிறேன் என்றும் குற்றம் சாட்டுகிறார்கள். முன் சொன்னபதிலைத்தான் இங்கும் நான் சொல்ல விரும்புகிறேன். நமது இனம், இடர்களைந்து தலை நிமிரட்டும். அதற்குப் பிறகு புத்திசாலிகளை விட்டு நல்லவர்களைப் பாராட்ட முனைவேன். (நம்மவர்களிலும் அப்படியாரும் இருக்கிறார்களா என்ன?)

**சல்லடையாரின் சலிப்பு** * **வாரிதியார் நல்லவரா? புத்திசாலியா?**

**3. உரலார் கேள்வி:-** 'பழிபாவம்', 'பழிபாவம்' என்கிறார்களே பழி என்றால் என்ன? பாவம் என்றால் என்ன?

**உலக்கையார் பதில்:-** குறித்த ஒரு செயலைச்செய்வதால், உலகம் ஒருவனைத் தூற்றுமாயின் அச்செயலால் வருவது 'பழி' எனப்படும். தூற்றப்படுவதோடல்லாமல் அச்செயலே அடுத்தடுத்த பிறவிகளுக்கும் காரணமானால் அது 'பாவம்' எனப்படும். இதுதான் பழிக்கும், பாவத்திற்கும் உள்ள வித்தியாசம்.

**சல்லடையாரின் சலிப்பு** * **இந்தநாட்டைக் கெடுத்தவர்களுக்கு பழியும் பாவமும் சேர்ந்தேல்லோ வரும்.**

**4. உரலார் கேள்வி:-** நோய்களுள்கடுமையான நோய் எதுவென்று சொல்லுங்கள் பார்க்கலாம்?

**உலக்கையார் பதில்:-** மீண்டும் நீளமாகப் பதில்சொல்ல வேண்டியிருக்கிறது. சுருக்கமான பதில்களை எதிர்பார்ப்போர் மன்னிப்பார்களாக!

நமது மூதாதையர்கள் நோய்களை இரண்டு கூறுகளாகப் பிரித்தனர். ஒன்று மனிதரைப் பீடித்துப் பின் விலகுவது. இரண்டாவது பீடித்தால் கடைசிவரை விலகாதது. இதில் முதலாவது வகைக்கு 'நோய்' என்றும், இரண்டாவது வகைக்குப் 'பிணி' என்றும்; அவர்கள் பெயரிட்டனர்.

மேற்சொன்ன வரையறையிலிருந்தே நோயைவிடப் பிணி கொடியது என்பதனை நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள். வந்தால் போகாத 'நீரிழிவு' போன்ற பல பிணிகளும் மனிதர்களை இன்றும் வருத்தியபடியேதான் இருக்கின்றன. இவையெல்லாம் கடுமையான பிணிகள்தான். ஆனால் இவற்றைவிடக் கொடுமையான பிணிகள் சில இருக்கவே செய்கின்றன.

அவற்றையும் நம் பெரியவர்கள் வரையறுத்திருக்கின்றனர். பசி, கோபம், தூக்கம், காமம் முதலியவையே அவையாம். இவை என்றும் மனிதர்களைப் பீடித்திருக்கும் பிணிகள் என்கிறார்கள். (மற்றைய ஜீவராசிகளையும்தான்)

இந்த இடத்தில் இன்னும் சற்று விரிவாய்ச் சொல்லவேண்டி இருக்கிறது.

நமது புத்தி முன்னுக்குப் பின் முரணாக மாறி, மாறிச் செயற்படுவதை நீங்கள் உங்கள் அனுபவத்தில் கவனித்திருப்பீர்கள். காலையில் இருந்த கோபம் மாலையில் சிலநேரம் மறைந்து விடுகிறது. இதற்கான காரணத்தை நம் இனத்துப் பெரியவர்கள் கண்டு சொல்லியிருக்கின்றனர்.

'சாத்வீகம்', 'ராஜசம்', 'தாமசம்' எனும்; மூன்று குணங்கள் நம் புத்தியில் மாறிமாறி வேலைசெய்து கொண்டிருக்கின்றனவாம். அதனால்த்தான் முன்னுக்குப் பின் முரணாக நம் புத்தி மாறி, மாறிச் செயற்படுகிறது என்கிறார்கள்.

இந்த மூன்று குணங்களில் சாத்வீக குணம் நம் புத்தியைத் தாக்குகிறபொழுது, எம்மிடம் நல்லியல்புகள் தோன்றுமாம். ராஜசகுணம் நம் புத்தியைத் தாக்குகிற பொழுது, எம்மில் முயற்சியும் உற்சாகமும் தோன்றுமாம். தாமசகுணம் நம் புத்தியைத் தாக்குகிறபொழுது, மயக்கமும் தீய குணங்களும் நம் புத்தியில் தோன்றுமாம்.

நமது தூக்கத்திற்கும், காமத்திற்கும் காரணமாக இருப்பது அந்தத் தாமச குணம்தான் என்கிறார்கள். அந்தத் தாமச குணம் எழுச்சி பெறுகிறபொழுது, வரும் மயக்கத்தால்த்தான் தூக்கமும், காமமும் உண்டாகிறதாம். இவ்விரண்டிலும் தூக்கத்தைவிடக் காமம் கொடியது. ஏனென்றால், புத்தி முழுமையாய் மயக்கமுற வருவதுதான் தூக்கம். அந்நிலையில் நாம் முழுமையாய்ச் செயலற்றுப் போவதால், அந்நேரத்தில் நாம் பிழைகள் செய்ய வாய்ப்பிருக்காது.

ஆனால் காமம் அப்படிப்பட்டதன்று. நாம் விழித்திருக்கும் நிலையிலேயே புத்தியில் ஏற்படும் மயக்கத்தால்த்தான் காமம் உண்டாகிறது. தாமச குணத்தால் காமம் உண்டாகிறபொழுது நமது புத்தி எவ்வளவு கூர்மையாக இருந்தாலும் அது மழுங்கடிக்கப்பட்டு விடுகிறது.

அதனால் வெட்கப்படவேண்டிய, அருவருக்கப்படவேண்டிய விடயங்கள் எல்லாம்கூட புத்தியின் அந்த மயக்கத்தால் இன்பம் தரும் விடயங்களாகத் தோன்றி விடுகின்றன. நாம் இருக்கும் சூழ்நிலை, நமது சமூக அந்தஸ்து, நம்மிடம் இருக்கும் உயர் பண்புகள், நம் அறிவு என்பவற்றையெல்லாம்கூட, இக்காம மயக்கம் மறக்கவும் செயலிழக்கவும் செய்துவிடுகின்றது. அந் நேரத்தில் நம்மை நெறிசெய்ய வேண்டிய புத்தி மழுங்கிப் போவதால் நாம் பிழைகளுக்கு ஆளாகி விடுகிறோம்.

அதனால்த்தான் பெரிய முனிவர்கள், துறவிகள், தலைவர்கள், அறிஞர்கள் என, பலரும் தம் நிலை மறந்து பெருந்தவறுகளைச் செய்து பெரும் பழிக்கும் பாவத்திற்கும் ஆளாகி விடுகின்றனர்.

எனவே செயல் நிலையில் நம் புத்தியை மழுங்கடிக்கச் செய்து இழுக்குத் தேடித் தரும், காமமே மனிதர்களைப் பிடித்திருக்கும் பிணிகளில் பெரும்பிணி என்பேன். அக்காமம் நமக்குள்ளேயே இருந்து எப்போதும் நம்மைவிட்டு நீங்காது பிணித்திருக்கும் பெரிய பிணி.

அதிலிருந்து தப்புவதற்காகத்தான், இறைபக்தி, அறநம்பிக்கை, சீலம், ஆசாரம் என்பவற்றை நம் பெரியவர்கள் சிறு வயதிலிருந்தே நமக்குப் போதிக்கத் தலைப்பட்டனர். அந்தப் போதனைகளைத் தாண்டியும் கூடப் பலரையும் அம் மயக்கம் பாதிக்கவே செய்து விடுகிறது.

இன்றைய பிள்ளைகளிடம் அந்தப் போதனைகள் எதுவும் போய்ச் சேருவதில்லை. காமத்தைத் தூண்டுவதற்கான கதவுகள் அவர்களுக்குப் பற்பல கருவிகளூடாகவும் கட்டுப்பாடின்றித் திறந்து விடப்பட்டிருக்கின்றன. இதனை வளர்ச்சி என்கிறார்கள். இதனால் விளையும் இன்னல்களை எதிர்காலம் எப்படித் தாங் கப் போகிறதோ? எல்லாம் கலியின் வன்மை அன்றி வேறென்ன?

**சல்லடையாரின் சலிப்பு** * **'காமம் செப்பாது கண்டது மொழிமோ'!**

**5. உரலார் கேள்வி:-** சிலரைப்பாராட்டும்போது இவர் 'ஐயந்திரிபறக் கற்றவர்' என்று சொல்கிறார்கள். அது என்ன ஐயந்திரிபறக் கற்றல் என்று சொல்லுங்களேன்?

**உலக்கையார் பதில்:-** ஒரு விடயத்தை அறியும் போது மூன்று விதமான நிலைகள் ஏற்படும் என்கிறார்கள். அதில் முதலாவது, குறித்த விடயம் தெளிவாக நமக்குத் தெரியாதபோது, அவ்விடயம் அதுவாயிருக்குமோ? இதுவாயிருக்குமோ? என்று குழப்பம் ஏற்படும் நிலை. அந்தக் குழப்ப நிலைக்கே 'ஐயம்' என்று பெயர்.

அதுவல்லாமல் சிலவிடயங்களை நாம் தீர்மானிக்கும்போது, அதை இதாகவும், இதை அதாகவும் மாறி முடிவுசெய்து விடுகிறோம். (நம் ஆய்வாளர்கள் செய்வதுபோல என்று வைத்துக் கொள்ளுங்களேன்)! இந் நிலையையே 'திரிபு' என்கிறார்கள்.

ஒரு விடயத்தை நாம் அறியும்போது அதுவா? இதுவா? என்ற ஐயமும் இருக்கக் கூடாது. அதை இதாகக் கருதுகிற திரிபும் இருக்கக்கூடாது. உள்ள பொருளை உள்ளபடி அறிவதற்குத் 'தெளிவு' என்று பெயர். இதுவே அறிதலின் மூன்றாவது நிலை.

அதனால் ஒரு விடயத்தை அறியும் போது, ஐயமும், திரிபும் இன்றி, தெளிய அறிதலே முக்கியமாம். அங்ஙனம் விடயங்களைத் தெளிய அறிந்தவர்களையே 'ஐயந்திரிபறக் கற்றவர்கள்' என்று நாம் சொல்கிறோம்.

**சல்லடையாரின் சலிப்பு** * **இப்போது எல்லாரையும்தான் அப்படிச் சொல்லுகிறார்கள்.**

**6. உரலார் கேள்வி:-** குறித்த பிரதேசங்களில் செல்வாக்குப்பெற்ற கிறிஸ்தவ மதத் தலைவர்கள், வெளிப்படையாகவே அரசியலிலும் வேட்பாளர் தேர்விலும் தலையிடுவதுபோல் தெரிகிறதே. இது சரியா?

**உலக்கையார் பதில்:-** மிகத் தவறான செயல் இது! ஏற்கனவே அரசியலில் மதத் தலைவர்கள் தலையிடப் போய்த்தான் இந்த நாடு இந்த அளவிற்குச் சீர் குலைந்து நிற்கிறது. இந்தச் சீர்குலைவால் நம் கண் முன்னால் நிகழ்ந்த அழிவுகளைப் பார்த்த பின்பும், இந்த மதத் தலைவர்கள் குறித்த பிரதேசங்களில் இருக்கும் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி மேலும் தம் மதத்தைப் பலப்படுத்துவதற்காக, அரசியலில் தலையிடுவது கண்டிக்கத்தக்க விடயமாகும்.

ஆன்ம ஈடேற்றத்திற்கான வழிகாட்டுதலும் அன்பு, அறம் முதலியவற்றைப் பரவச் செய்வதுமே சமயவாதிகளுக்கான முக்கிய கடமைகள். அதை விட்டுவிட்டுச் சில சமயவாதிகள் இன்று வேறென்னவோ செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களது இப்பாதகச் செயலைப் பரலோகத்தில் இருக்கும் பிதா மன்னிப்பாராக!

**சல்லடையாரின் சலிப்பு** * **'ஆமென்!'**



காலைக்கதிர் Kalaikkathir

# வறுமையின் பிடியில் 1,814 கர்ப்பிணிகள்

## யாழ்ப்பாணத்தில் நிலவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1814 கர்ப்பிணிகள் வறுமை நிலையில் உள்ளனர் என யாழ். மாவட்ட செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா இடர் காலத்துக்குப் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நிலைமை காரணமாக பல கர்ப்பிணிப் பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்களில் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 370 கர்ப்பிணிப் பெண்கள் வறுமை நிலையில் காணப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித் துறைப் பிரதேச செயலகத்தில் 226 கர்ப்பிணிப் பெண்களும், சங்கானை பிரதேச செயலகத்தில் 157 கர்ப்பிணிகளும், தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் 139 கர்ப்பிணிகளும், யாழ்ப்பாணா பிரதேச செயலகப் பிரிவில் 138 கர்ப்பிணிகளும், கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் 128 கர்ப்பிணிகளும், சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 118 கர்ப்பிணிகளும், உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் 117 கர்ப்பிணிகளும், மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் 98 கர்ப்பிணிகளும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 97 கர்ப்பிணிகளும், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் 91 கர்ப்பிணிகளும், காரைநகர் பிரதேசசெயலகப்பிரிவில் 40 கர்ப்பிணிகளும், வேலணை பிரதேச செயலகப் பிரிவில் 49 கர்ப்பிணிகளும், ஊர்காவற்துறை பிரதேச செயலகப் பிரிவில் 25 கர்ப்பிணிகளும், நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில் 21 கர்ப்பிணிகளும், ஆக 1814 பேர் வறுமை நிலையில் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் அரசாங்கத்தினால் கர்ப்பிணிகளுக்கு வழங்கப்படும் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு 8 மாதங்களுக்கு மேலாக வழங்கப்படாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனுமதிப்பத்திரம் இல்லாது மரக்குற்றிகளை கொண்டு சென்றவர் யாழ்ப்பாணத்தில் கைது!



யாழ்ப்பாணம், மார்ச் 18

அனுமதிப் பத்திரம் இல்லாமல் மலைவேம்பு மரத்தை வெட்டி எடுத்துச் சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், உழவு இயந்திரம் மற்றும் மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புல னாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரத்துக்கும் எந்தவொரு ஆவணங்களும் இல்லை எனவும், கைது செய்யப்பட்ட சந்தேகநபரையும், கைப்பற்றப்பட்ட பொருள்களையும் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# உள்ளூர் துப்பாக்கியுடன் கந்தகெட்டிய நபர் கைது

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் 58 வயதுடைய நபரொருவரை கந்தகெட்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதியன்று கந்தகெட்டிய பொலிஸாருக்குக் கிடைத்த ரகசிய தகவலொன்றுக்கு அமைய குறித்த பகுதியில் பொலிஸார் சோதனையிட்டபோது சந்தேக நபரிடமிருந்து இந்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியொன்று கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர் பதுளை மஜிஸ்திரேட் நீதிமன்றில் நேற்று (வெள்ளிக்கிழமை) ஆஜர்படுத்தப்பட்டார்.

# பாக்கு நீரிணையைக் கடந்து இந்தியப் பெண் சாதனை



தனுஷ்கோடியில்இருந்து தலைமன்னாருக்குநீந்திவந்து மீண்டும் தனுஷ்கோடிக்கு நீந்தி பாக்கு நீரிணை கடற்பகுதியைகடந்த முதல்பெண் என்றசாதனையை இந்தியப் பெண் படைத்துள்ளார்.

பாக்கு நீரிணை கடல் பகுதி தமிழகத்தையும் இலங்கையையும் பிரிக்கும் நீரிணை ஆகும். ராமேஸ்வரம் தீவும், அதனைத் தொடர்ந்துள்ள 13 மணல் தீடைகளும், பாக்கு நீரிணை கடற்பகுதியை மன்னார் வளைகுடாவில் இருந்து பிரிக்கிறது. தமிழகத்திலேயே மிகவும் ஆழம் குறைந்த அதே சமயம் பாறைகளும் ஆபத்தான ஜெல்லி மீன்கள் நிறைந்த கடற்பகுதியும் இதுவே ஆகும்.

இதுவரை 4 பெண்கள் உட்பட 18 பேர் பாக்கு நீரிணையை தனியாக நீந்தி கடந்து சாதனை புரிந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் இலங்கையின் தலைமன்னாரிலிருந்து இந்தியாவின் தனுஷ்கோடிக்கோ அல்லது தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கோ நீந்திச் சென்றவர்கள். இது தவிர மேலும் சிலர் குழுவாக ரிலே மற்றும் மாரத்தான் முறையிலும் பாக்கு நீரிணை கடலை நீந்தி கடந்துள்ளனர்.

ஆனால், ஓர் இடத்திலிருந்து புறப்பட்டு மறுபுறத்தை அடைந்த பின்பு தொடர்ச்சியாக மீண்டும் அங்கிருந்து புறப்பட்டு தொடங்கிய இடத்துக்கே வந்து சாதனை புரிந்தவர்கள் 3 பேர் மட்டுமே. அதில் முதலாமானவர், யாழ்ப்பாணம் மாவட்டம் வல்வெட்டித்துறையை சேர்ந்த வி.எஸ்.குமார் ஆனந்தன். இவர் 1971 ஆம் ஆண்டு தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கு நீந்தி வந்து மீண்டும் தலைமன்னாருக்கு நீந்தி வந்தடைந்தார். மொத்தம் தூரத்தை 51 மணி நேரத்தில் நீந்திக் கடந்தார்.

அதன் பின்பு இதே சாதனையை 11.4.2021 இல் இலங்கை கடற்படையைச் சேர்ந்த ரோஷான் அபேசுந்தர 28 மணி 19 நிமிடங்களில் நிகழ்த்தினார். கடந்த 29.03.2022 அன்று தமிழ்நாட்டில் தேனியைச் சேர்ந்த பள்ளி மாணவனான சினேகன் தனது 14 ஆவது வயதில் 19 மணி 45 நிமிட நேரத்தில் தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னாருக்கு நீந்திசென்று மீண்டும் தனுஷ்கோடிக்கு நீந்தி சாதனை படைத்தார்.

முன்னதாக பெங்களூரை சேர்ந்த தொழில்முறை நீச்சல் வீராங்கனையான சுஜேத்தா தேப்பர்மன் (வயது -40) தனுஷ்கோடியிலிருந்து இலங்கையிலுள்ள தலைமன்னார் நீந்தி சென்று அங்கிருந்து மீண்டும் தனுஷ்கோடிக்கு வரையிலும் உள்ள பாக்கு நீரிணை கடற்பரப்பை இருபுறமாக நீந்தி கடப்பதற்கான சாதனையை முன்னெடுத்தார். இவர் கடந்த வருடம் மார்ச் மாதம் காலை 8.23 மணியளவில் தனுஷ்கோடி அரிச் சல்முனையிலிருந்து நீந்த ஆரம்பித்து 10 மணி 9 நிமிடங்கள் நீந்தி அன்று மாலை 6.33 மணியளவில் ஒருபுறமாக நீந்தி இலங்கையில் உள்ள தலைமன்னாரை அடைந்தார். தொடர்ந்து அங்கிருந்து மறுபுறமாக தனுஷ்கோடிக்கு நீச்சல் அடித்துக் கொண்டு வரும்போது அதிகாலை 2.09 மணி அளவில் சர்வதேச கடற்பரப்பை தாண்டி நீந்தி வரும்போது ஜெல்லி மீன்கள் கடித்ததால் பாதிக்கப்பட்டு தொடர்ந்து நீந்த முடியாமல் நீச்சலை முடித்தார்.

மீண்டும் தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னார் நீந்தி சென்று அங்கிருந்து மீண்டும் தனுஷ்கோடிக்கு நீந்தி வருவதற்கு சுஜேத்தா தேப் பர்மன் இந்திய - இலங்கை இரு நாட்டு அரசிடம் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தார்.

அனுமதி கிடைத்த நிலையில், ஜேத்தா தேப் பர்மன் புதன்கிழமை மாலை 4.45 மணியளவில் தனுஷ்கோடி பழையதுறைமுகத்திலிருந்து நீந்த ஆரம்பித்து 12 மணி 15 நிமிடங்கள் நீந்தி வியாழக்கிழமை அதிகாலை 5 மணியளவில் ஒருபுறமாக நீந்தி இலங்கையில் உள்ள தலைமன்னாரை அடைந்தார்.

தொடர்ந்து உடனே மறுபுறமாக தலைமன்னாரிலிருந்து மீண்டும் தனுஷ்கோடிநோக்கிநீந்தத்தொடங்கி வியாழக்கிழமை பகல் 12.20 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல்முனை வரை நீந்தி கரையை அடைந்தார். 62 கிலோ மீற்றர் தூரத்தை 19 மணி 31 நிமிடங்கள் ஜேத்தா தேப் பர்மன் நீந்தி கடந்து புதிய சாதனை படைத்துள்ளார்.

இதன் மூலம் முதன் முறையாக தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னாருக்கு இரண்டு முறை நீந்தி கடந்தவர் என்ற சாதனையையும், தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னாருக்கு நீந்தி சென்று மீண்டும் தனுஷ்கோடிக்குநீந்திபாக்குநீரிணை கடற்பகுதியை கடந்த முதல் பெண் என்ற சாதனையையும் சுஜேத்தா தேப் பர்மன் நேற்று படைத்தார்.

மேலும் தேனியைச் சேர்ந்த சினேகன் சாதனையையும் முறியடித்துள்ளார்.


# கேள்வி அறிவித்தல்

# பருத்தித்துறை நகரசபை

1. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறைநகரசபை, பருத்தித்துறை அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
2. தேசியபோட்டிக் கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2016.09.30ஆந் திகதிய04/2016(i) இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் படி வடமாகாணஎல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட பெறுகைதாரர் களுக்குமட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப் படாதவராகவும் அட்டவணையில் காட்டியபடிகட்டட/வீதிப்புனரமைப்புக்குபொருத்தமானதரங்களில் நிர்மாணத்தொழில் அபிவிருத்திஅதிகாரசபையில் (CIDA) பதிவுசெய்யப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
4. தேவையானதகைமைகள் பெறுகைஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை(Schedule) பகுதி 5 இல் காட்டப் பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் (தொலைபேசி இலக்கம்:- **021-226-3213)** மேலதிக தகவல்களையும்,பெறுகை ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
6. பெறுகைப் பத்திரம் வழங்கப்படும் திகதி20.03.2023ந் திகதிதொடக்கம் 03.04.2023 ந் திகதி பி.ப3.00 மணிவரை அலுவலக நாட்களில் மீளளிக்கப்படாத பண மாகரூபா**3000/=** இனை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
7. பெறுகை ஆவணங்களை இரு பிரதிகளில் தயாரித்துதலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறைநகரசபை, பருத்தித்துறை எனும் முகவரிக்கு**04.04.2023**ஆந் திகதிமு.ப10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ சேர்ப்பிக்கவேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். பெறுகை நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பெறுகை திறக்கப்படும்.
8. பெறுகையானது சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து அறுபத்து மூன்று (**63**)நாட்கள் 06.06.2023வரையும் செல்லுபடியாகும்.
9. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் 27.03.2023 ந் திகதியன்று10.00 மணிக்கு நடைபெறும். சொந்த செலவில் பங்கு பற்றலாம்.
10. பெறுகைதொடர்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் அதிகாரம் பெறுகைக்குழுவின் தலைவருக்கே உண்டு.
11. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலைத்திட்டம் | மதிப்பீட்டுதொகை மில்லியன் ரூபாவில் (வற் நீங்கலாக) | ஒப்பந்த காலம் | நிதி மூலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைவைப்புரூபா | செல்லுபடியாகும் காலம் |
| 1 | நெல்லண்டைகிழக்கு வீதி4ம்,1ம் ஒழுங்கை நிர்மாணம் | 2.04 | 60நாட்கள் | சபை நிதி 2022,2023 | C9/C8 | 20,500.00 | 04.07.2023 |
| 2 | உதயசூரியன் 2ம், 4ம் ஒழுங்கை நிர்மாணம் | 3.21 | 60நாட்கள் | சபை நிதி 2022,2023 | C9/C8 | 35,000.00 | 04.07.2023 |
| 3 | சாஸ்த்திரியார் வீதி 3ம் ஒழுங்கை நிர்மாணம் | 2.04 | 60நாட்கள் | சபை நிதி 2022,2023 | C9/C8 | 20,500.00 | 04.07.2023 |
| 4 | பருத்தித்துறைவீதி 6ம் ஒழுங்கை மீள் நிர்மாணம் | 2.70 | 60நாட்கள் | சபை நிதி 2022,2023 | C9/C8 | 27,000.00 | 04.07.2023 |
| 5 | அரசடிவீதி 1,2 ம் ஒழுங்கை நிர்மாணம் | 1.66 | 60நாட்கள் | சபை நிதி 2022,2023 | C9/C8 | 17,000.00 | 04.07.2023 |
| 6 | சின்னத் தோட்டம் வடிகான்மீள் நிர்மாணம் | 0.78 | 60நாட்கள் | சபை நிதி 2022,2023 | C9/C8 | 8,000.00 | 04.07.2023 |
| 7 | கடற்கரைவீதி 19 ம் ஒழுங்கை நிர்மாணம் | 2.96 | 60நாட்கள் | சபை நிதி 2022,2023 | C9/C8 | 30,000.00 | 04.07.2023 |
| 8 | யாலப்பை 1 ம் ஒழுங்கைமீள் நிர்மாணம் | 0.86 | 60நாட்கள் | சபை நிதி 2022,2023 | C9/C8 | 9,000.00 | 04.07.2023 |
| 9 | பூதவராயர் வீதி 3ம் ஒழுங்கை நிர்மாணம் | 1.66 | 60நாட்கள் | சபை நிதி 2022,2023 | C9/C8 | 17,000.00 | 04.07.2023 |
| 10 | பெருந்தெருவீதி மிகுதி வேலைமீள் நிர்மாணம் | 2.49 | 60நாட்கள் | சபை நிதி 2022,2023 | C9/C8 | 25,000.00 | 04.07.2023 |
| 11 | கல்லூரிவீதி வாய்க்கால் நிர்மாணம் | 0.53 | 60நாட்கள் | சபை நிதி 2022,2023 | C9/C8 | 5,500.00 | 04.07.2023 |
| 12 | பண்டாரி அம்மன் கோவில் பின் வீதி நிர்மாணம் | 1.31 | 60நாட்கள் | சபை நிதி 2022,2023 | C9/C8 | 13,500.00 | 04.07.2023 |
| 13 | வோல்டன் பிளேஸ் 4ம் ஒழுங்கை நிர்மாணம் | 1.47 | 60நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2021 | C9/C8 | 15,000.00 | 04.07.2023 |
| 14 | துரைதோட்டம் வீதிமீள் நிர்மாணம் | 2.51 | 60நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2021 | C9/C8 | 25,500.00 | 04.07.2023 |
| 15 | வக்கமேடை வடிகான் நிர்மாணம் | 2.54 | 60நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2021 | C9/C8 | 25,500.00 | 04.07.2023 |
| 16 | கல்லூரிவீதி 13 ம் ஒழுங்கை, தட்டாதெரு மிகுதி வேலை நிர்மாணம் | 3.24 | 60நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2021 | C9/C8 | 32,500.00 | 04.07.2023 |
| 17 | மணல் ஒழுங்கை 1ம் ஒழுங்கை நிர்மாணம் | 0.60 | 60நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2021 | C9/C8 | 6,100.00 | 04.07.2023 |
| 18 | துலைமை அலுவலகக் கூரை திருத்தம் | 7.33 | 90நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2021 | C8/C7 | 73,500.00 | 04.07.2023 |
| 19 | மணல் ஒழுங்கை பக்கவடிகான் நிர்மாணம் | 4.11 | 60நாட்கள் | அபிவிருத்தி ஒதுக்கம் 2021 | C8/C7 | 42,000.00 | 04.07.2023 |

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக் குழு,**
**பருத்தித்துறைநகரசபை, பருத்தித்துறை.**
**2023.03.18**


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.03.2023இல் வெளியிடப்பெற்றது.

## நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 05

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 03 புதன்கிழமை 17.03.2023 கதிர் 380

## இந்திய மீனவர்கள் 12 பேர் விடுவிப்பு

### 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

வடக்கு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த குற்றத்துக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 12 தமிழக மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை நீதிவான் பொன்னுத்துறை கிருாந்த் முன்னிலையில் நிறுத்தப்பட்ட மீனவர்களை விடுவித்து உத்தரவிட்டார் அவர்.

பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒன்றரை வருட சிறைத்தண்டனை அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்தக் காலப் பகுதிக்குள் மீண்டும் இவர்கள் அத்துமீறி 2



### இராணுவப் பயிற்சி வழங்கும்

## இலங்கைக்கு நன்றி தெரிவித்த மாலைதீவு

இலங்கையிலுள்ள இராணுவப் பயிற்சி நிறுவனங்களால் மாலைதீவு பாதுகாப்புப் படைகளினருக்கு வழங்கப்படும் இராணுவப் பயிற்சி குறித்து இலங்கைக்கான மாலைதீவுக் குடியரசின் புதிதாக நியமிக்கப்பட்ட உயர் ஸ்தானிகர் அலி பாயிஸ் பாராட்டு தெரிவித்தார்.

இலங்கை தமது பாதுகாப்புப்படை வீரர்களுக்கு உயர்தர மற்றும் தரமான பயிற்சிகளை வழங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று மாலைதீவு மக்கள் அவர்களின் பல்வேறு தேவைகளுக்காக இலங்கைக்கு வரும் சந்தர்ப்பங்களில் இலங்கை அதிகாரிகளால் அவர்களுக்கு வழங்கப்படும் ஒத்துழைப்புக்காக உயர் ஸ்தானிகர் பாயிஸ் தனது மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்தார். கோட்டே, ஸ்ரீ ஜய–வர்தனபுரவில் உள்ள இலங்கை பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்த தூதுவரை, பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன வரவேற்றார் .

இருவருக்கிடையே இடம் பெற்ற சந்திப்பின் போது மாலைதீவு உயர் ஸ்தானிகர் மேற்படி கருத்துக்களை தெரிவித்தார். மாலைதீவு உயர் ஸ்தானிகர் பாதுகாப்பு அமைச்சுக்கு மேற்கொள்ளும் முதல் விஜயமாகவும், இலங்கையில் தனது பணிகளைப் புதிதாகப் பொறுப்பேற்ற பின்னர் பாதுகாப்பு செயலாளருடனான முதலாவது உத்தியோகபூர்வ சந்திப்பாகவும் இது அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காங்கேசன் – காரைக்கால் பயணிகள் கப்பல் சேவை ஏப்ரல் 29இல் தொடக்கம்

### 120 பேர் பயணிக்கும் கப்பல் தயார்



(ந.லோகதயாளன்)

இலங்கையின் காங்கேசன் துறைக்கும் இந்தியாவின் காரைக்கால் துறைமுகத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை ஏப்ரல் 29 தொடங்கப்படவுள்ளன. அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் முழுமையடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தியப் பண மதிப்பில் பயணி ஒருவருக்கு 9 ஆயிரம் ரூபா மற்றும் வரிகள் கட்டணமாக அறவிடப்படவுள்ளன. இலங்கை மதிப்பில் 35 ஆயிரம் முதல் 40 ஆயிரம் ரூபா கட்டணமாக அறவிடப்படும். 2

## நிழல் உலக தாதாக்களை 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி!

மடகஸ்காரிலிருந்து நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள பிரபல போதைப்பொருள் வர்த்தகர்களான ஹரக்கட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோரை 90 நாட்கள் தடுத்துவைத்து மேலதிக விசாரணைகளை நடத்துவதற்கான அனுமதியைப் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள மேற்படி



இரண்டு சந்தேகநபர்களும், தற்போது குற்றத் தடுப்பு விசாரணை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப் படுவதாகவும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்நபர்கள் இருவரும் தனி விமானம் மூலம் மடகஸ்காருக்கு தப்பிச் சென்றிருந்தனர் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்நிலையில் இன்டர்போலின் ஒத்துழைப்புடன் மடகஸ்கார் பாதுகாப்புப் படையினர் அவர்களைக் கைது செய்திருந்தனர். 2

## வேரவிலில் சிமெந்து ஆலை சாத்தியமா யாழ். பல்கலை ஆய்வு நடத்தவேண்டும்

### துணைவேந்தருக்கு சிறீதரன் எம்.பி. கடிதம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 18

கிளிநொச்சி பொன்னவெளியில் சிமெந்து தொழிற்சாலை அமைக்கலாமா என யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் ஆய்வு செய்து மக்களிற்கு வெளிப்படுத்த வேண்டும் என்று யாழ்ப்பாணம் பலகலைக் கழக துணைவேந்தருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் கடிதம் எழுதியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி பிரதேசத்தின் பொன்னாவெளி கிராம அலுவலர் பிரிவிலுள்ள வேரவில் கிராமத்தில் சிமெந்து தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன் சாதக, பாதகத் தன்மையை ஆய்வுக்கு உட்படுத்தக் கோரியே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் எழுத்து–மூலம் கோரிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிளிநொச்சியின் தொன்மம் மிகு பேரூர்களுள் ஒன்றாக விளங்கும் வேரவில் கிராமம் 'ஈழவூர்' என சிறப்பித்துச் சொல்லப்படும் அளவிற்கு கிளிநொச்சியின் பண்பாட்டு முக்கியத்துவம் மிக்க அடையாளமாக விளங்குகிறது.

கிராஞ்சி கிழக்கு, கிராஞ்சி மேற்கு, 2

## பல கொலைகளின் சந்தேகநபர் பூரு மூனா அதிரடியாகக் கைது!

### நீதிமன்றில் சரணடையச் சென்ற போது மடக்கப்பட்டார்

ரவிந்து சங்க என்றழைக்கப்படும் பூரு மூனா, நீதிமன்றத்தில் சரணடையச் சென்றபோது கைது செய்–யப்பட்டுள்ளார்.

அவர், அவிசாவளை நீதிவான் நீதிமன்றத்துக்குச் சரணடையச் சென்ற போது, பொலிஸார் என்று தம்மை அடையாளப்படுத்திக்கொண்டவர்களால் கைது செய்யப்பட்டார்.

அண்மைக் காலமாக இடம்பெற்ற கொலைச் சம்பவங்களுக்காக அவர் தேடப்பட்டு வந்தார் எனக் கூறப்படும் அவிசாவளை நீதிவான் நீதிமன்றில் சரணடைவதற்காகச் சட்டத்தரணி



ஒருவருடன் சென்றிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளார்.

அவிசாவளை நீதிவான் நீதிமன்றத்துக்கு அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவே பொலிஸார் வாகனத்தை நிறுத்தி அவரைக் கைது செய்தனர்.

இந்த நிலையில் அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சமிந்த அத்துகோரள, அவரது உயிருக்கு உடனடி ஆபத்து இருப்பதாகவும், அவர் கொல்லப்படுவார் என அஞ்சுவதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

தனது கட்சிக்காருக்கு வாழ்வதற்கான உரிமை இருப்பதாகக் குறிப்பிட்ட சட்டத்தரணி, அவர் நீதிமன்றத்தில் சரணடைய விரும்புகிறார் எனவும் குறிப்பிட்டார். இதையடுத்து அவரை உடனடியாக நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு அவிசாவளை நீதிவான் ஜனக சமரசிங்க உத்தரவிட்டார்.

## கீரிமலை ஆதிசிவன் ஆலயம் அழிக்கப்பட்டது முழு உண்மை

### ஆறு. திருமுருகன் நேரில் பார்த்தபின் உறுதி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.18

யாழ்ப்பாணம் கீரிமலைப் பகுதியில் இருந்த ஆதிசிவன் ஆலயம் அழிக்கப்பட்டதும், சிவ சின்னங்கள் இடித்து அழிக்கப்பட்டதும் உண்மையான செய்திகள் என்று இந்து மா மன்ற உபதலைவர் ஆறு.திருமுருகன் உறுதி செய்திருக்கிறார்.

கீரிமலையில் இருந்த ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் சடையம்மா மடம் என்பவற்றோடு சில சமாதிகளும் இடித்து அழிக்கப்பட்டதாக, அங்கு சென்றுவந்தவர்கள் சொன்ன தகவல்களின் அடிப்படையில் காலைக்கதிர் செய்தி வெளியிட்டிருந்தது.

"அந்தச் செய்தி தொடர்பில் நானும்கூடக் கருத்து வெளியிட்டிருந்தேன். பலரும் கண்டனங்களையும் தெரிவித்திருந்தனர். ஆனால், கீரிமலையில் உள்ள ஜனாதிபதி மாளிகை அருகில் இருந்த ஆதிலிங்கேஸ்வரர் எனப்படும் சிவன் ஆலயமோ அல்லது சடையம்மா மடமோ அழிக்கப்படவில்லை. அவை அனைத்தும் இருப்பதாக சில அரச பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அதனால் அந்த இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட நீண்ட முயற்சி மேற்கொண்டோம். சிவன் அருளால் கடற்படையினரின் பாதுகாப்பில் உள்ள 2

## முன்னாள் எம்.பி. பியசேன வாகன விபத்தில் இறப்பு





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச். பியசேன விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இன்று காலை அக்கரைப்பற்று – பொத்துவில் பிரதான வீதியின் சின்னமு–கத்துவாரம் 40ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த அவர் கல்முனை வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் லொறியும் மோதிக்கொண்ட விபத்திலேயே இந்த விபரீதம் நிகழ்ந்துள்ளது.

விபத்தை அடுத்து அக்கரைப்பற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் பின்னர் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

பி.எச்.பியசேன, 2010ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றுக்குத் தெரிவானார்.

எனினும், பின்னர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அவர் இணைந்து கொண்டார்.

அதன்பின்னர் 2015ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அவர் அதில் தோல்வியடைந்தார்.

## அரசியல் கைதி ஒருவர் இன்று வெளியே வந்தார்

ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட அரசியல் கைதி ஒருவர் இன்று விடுவிக்கப்பட்டார்.

செல்லையா சதீஸ்குமார் கடந்த 15 ஆண்டுகள் தமிழ் அரசியல் கைதியாக சிறைப்படுத்தப்பட்டிருந்தார். இவருக்கு, பெப்ரவரி–1 ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, சதீஸ்குமார் ஏற்கனவே உச்ச நீதிமன்றில் செய்யப்பட்டிருந்த மேல்முறையீட்டு மனுவினை மீளப் பெற்றுக்கொள்வதற்கான தனது ஒப்புறுதியினை பெப்ரவரி–23 அன்று சட்டத்தரணிக்கூடாக மன்றுக்கு சமர்ப்பித்திருந்தார்.

மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவினை மீளளித்த உயர் நீதிமன்றம், குறித்த வழக்கினை 2

## போதிய நிதி தந்தால் தேர்தல் நடக்குமா?

### பவ்ரல் பிரதமரிடம் கேள்வி

உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவதற்கு நிதி இல்லை என்பதுதான் காரணம் என்று ஆட்சிய–ாளர்கள் கூறி வருகின்றனர். அப்படியாயின் ஏதாவது ஒரு தரப்பு தேவையான நிதியைத் தந்தால் தேர்தலை நடத்த ஆட்சியாளர்கள் தயாரா?

இப்படிக் கேள்வி எழுப்பியிருக்கிறது சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கைக் குழுவான (பவ்ரல்).

சட்ட ரீதியான காரணங்களை முன்வைக்காமல், உள்ளூராட்சித் தேர்தலை காலவரையறையின்றி ஒத்திவைக்க ஆட்சியாளர்கள் முயற்சிப்பது தெளிவாகத் தெரிகிறது என பெஃப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி, பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தத் தருணத்தில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க முற்போக்கான தேர்தல் சீர்திருத்தங்களை ஒரு கருவியாகப் பயன்படுத்த அரசாங்கம் முயற்சிப்பதாகவும் அவர் சாடியுள்ளார். 2

## காங்கேசன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காங்கேசன்துறையில் இருந்து காரைக் காலிற்கான பயணிகள் கப்பல் சேவை யைத் தொடங்குவது தொடர்பில் கப்பல் சிவில் விமான போக்குவரத்து அமைச்சின் அலுவலகத்தில் அமைச்சர் நிமால் சிறி பால டீ சில்வா தலைமையில் வியாழக் கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் ஆராயப் பட்டது. இந்தக் கூட்டத்திலேயே சேவை யைத் தொடங்குவதற்கான நாளும் தறிக்கப்பட்டது.

இக் கப்பல் சேவையை ஐ.என்.டி.எஸ். ஆர்.ஐ என்னும் நிறுவனம் தொடங்கவுள் ளது. முதற்கட்டமாக. 120 பயணிகள் பயணிக்கத்தக்க கப்பல் சேவையில் ஈடுபடுத்தப்பபடவுள்ளது.

அமைச்சர் நிமால்சிறிபால டீ சில்வா தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் கடற்படை அதிகாரிகள்,

துறைமுக அதிகார சபையினர், தடிவரவு குடியகழ்வு திணைக்கள அதி காரிகள், கப்பல் நிறுவனப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது காங்கேசன் துறையில் பயணிகளுக்கான சுங்க மற்றும் குடியகல்வு, தடிவரவு பகுதிகளை உடன் அமைப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது. பரிசோதனைக் கான ஏற்பாடுகளை உடன் மேற்கொள்வது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

இந்தக் கப்பல் சேவையில் பயணி ஒரு வர் மொத்த நிறையாக 100 கிலோ வரையில் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்து கைது செய்யப்பட்டால் அவர்களுக்குத் இந்தக் குற்றத்துக்கும் சேர்த்துத் தண்டனை நிறைவேற்றப்படும்.

மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகை அரசுடைமையாக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் மார்ச் 12 ஆம் திகதி 16 இந்திய மீனவர்கள் யாழ். நெடுந்தீவு வெற்றிலைக்கேணி மற்றும் அனலைதீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களில் அனலைதீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 4 இந்திய மீனவர்களும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறி-யலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## நிழல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதையடுத்து, மடகஸ்காருக்குச் சென்ற குற்றத் தடுப்பு விசாரணை திணைக்கள அதி காரிகள், இவ்விருவரையும் நேற்றுமுன்தி னம் இலங்கைக்கு அழைத்து வந்தனர்.

## கீரிமலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பகுதிக்குள் சென்று நேரில் நிலவரத்தைப் பார்வையிட்டேன்.

அங்கே இருந்த ஆதிசிவன் ஆலயம் இருந்த தடயமே தெரியாது அழிக்கப்பட்டுள் ளது. அது மறுக்கப்பட முடியாத உண்மை. உண்மை இப்படி இருக்கும்போது சிவன் ஆலயத்தைத் தமது வாழ்நாளிலேயே பார்த்திராதவர்கள் அந்தச சிவன் ஆலயம் இருக்கின்றது எனக்கூறி எம்மை ஏமாற்றி விட்டனர்.

ஆதி சிவன் ஆலயம் அருகே இருந்த சடையம்மா மடமும் அடியோடு அழிக்கப் பட்டு பற்றை மட்டுமே வளர்ந்த பிரதேச மாகக் காணப்படுகின்றது. இத்தனைக்கும் ஒரேயொரு ஆறுதல் எமது பெண் சித்தர் சடையம்மாவின் சமாதி முழுமையாக உள்ளது. அத்தோடு அங்கே இருந்த நான்கு சமாதிகளில் இரண்டு சமாதிகள் இன்னமும் உள்ளன. ஏனைய இரண்டு சமாதிகளும் இடித்து தள்ளப்பட்டு தூரத்தில் ஒதுக்கி விடப்பட்டுள்ளன.

ஆதிசிவன் ஆலயம் மற்றும் சடை யம்மா மடம் என்பவற்றுக்கு அப்பால் சற்று தொலைவில் இருந்த வைரவர் ஆலயத்தையும் அடியோடு காணவில்லை. அது இருந்ததற்கான ஆதாரத்தையும் காண முடியவில்லை" என்று காலைக் கதிர் பத்திரிகையிடம் தெரிவித்தார் ஆறுதி ருமுருகன்.

ஆலயங்கள் இருந்த பகுதிகளில் ஜனாதி பதி மாளிகை அமைக்கப்பட்டுவிட்டபோதும் எஞ்சியிருக்கும் நிலத்திலேனும் நாம் ஆலயங்களை அமைத்தும் சடையம்மா சமாதியை புனரமைத்து போற்றி வணங்க வும் அனைத்துத் தரப்பும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள் ளோம். இதறகு அனுமதிகிடைக்கும் பட்சத்தில் ஏப்ரல் 6 அங்கே ஒரு லிங்கத்தைப் பிரதி ஸ்டை செய்ய முடியும் – என்றார்.

## வேரவில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மொட்டையன்குளம், பிருந்தாவனம், மதனி குடியிருப்பு, வலைப்பாடு, பொன்னா வெளி, பாலாவி ஆகிய கிராமங்கள் சூழ வுள்ள இப்பிரதேசத்தில் 1156 குடும்பங் களைச் சேர்ந்த 4276 இற்கும் அதிகமான மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

கடற்புறச்சூழலியல் கொண்ட இப்பிர தேச மக்கள் ஏற்கனவே குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் நிலையில், தமது பகுதியில் புதிதாக ஓர் சிமெந்து தொழிற்சாலை அமைக்கப்படுமாயின் அது தமது இருப்பைக் கேள்விக்குட்படுத்தக் கூடிய அபாயகரமான சூழலைத் தோற்று விக்கும் என்ற இயல்பான அச்சத் திற்கு ஆட்பட்டவர்களாக, அதுபற்றிய தெளிவுபடுத்தல்களை பெற்றுக் கொள்ள முடியாதவர்களாக உள்ளனர் இந்தப் பகுதி மக்கள்.

எமது மக்களின் உணர்வு நிலைக ளோடு என்றும் ஒருமித்திருக்கும் நிறுவன மான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தன் சார் சமூகத்தின் இருப்புக்காக ஆற்றக் கூடிய சமூகநலன்சார் பணிகளில் ஒன்றாக இதனைக் கருதி, வேரவில் பிரதேசத்தில் சிமெந்து தொழிற்சாலை ஒன்றை அமைப் பதால் எமது மக்களின் இயல்பு வாழ்வில் ஏற்படக்கூடிய குடிதண்ணீர் பாதிப்பு உள்ளிட்ட சூழலியல் இடர்பாடுகள் பற்றிய தெளிவினை ஏற்படுத்துவதற்காக, துறை சார் பேராசிரியர்களும் மாணவர்களும் இணைந்து ஓர் முழுமையான ஆய்வை மேற்கொள்ள வேண்டும்.

அப்பிரதேச மக்களுக்கும் எமது சமூகத் துக்கும் இந்தச் சாதக, பாதக தன்மைகள் குறித்த தெளிவுபடுத்தலை ஏற்படுத்த முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின் றேன் – என்றுள்ளது.

## அரசியல் கைதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முடிவுக்குக் கொண்டு வந்திருந்தது. எனி னும், மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நீதி நிர்வாகச் செயற்பாடுகள் காலதாமதம் ஆனதால், தமிழ் அரசியல் கைதியான சதீஸ்குமார் இன்றைய தினமே கொழும்பு-புதிய மகசின் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

விவேகானந்த நகர் கிழக்கு, கிளிநொச் சியை வாழ்விடமாகக் கொண்ட சதீஸ்குமார், நெருக்கடிகள் மிகுந்த போர்க் காலங்களில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் நோயாளர் காவு வண்டி ஓட்டுநராக உயிர் காப்புப் பணியில் அர்ப்பணிப்புடன் கடமை யாற்றி வந்திருந்தார்.

2008 ஆம் ஆண்டு பணியின் நிமித்தம் கிளிநொச்சி வைத்திசாலையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்தபோது, வவுனியா- தேக்கவத்தை சோதனைச் சாவடியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். சதீஸ்குமாருக்கு எதிராக, விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு உதவி னார் என்ற குற்றப்பத்திரம் தயாரித்து வவுனியா மேல் நீதிமன்றில் அவசரகாலச் சட்டவிதியின் கீழ் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம், 2011 ஆம் ஆண்டு, சதீஸ்குமார்க்கு ஆயுட்கால சிறை தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

அதனையடுத்து, வழக்கின் தீர்ப்பை ஆட்சேபித்து கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றில் எதிராளி மேல் முறையீடு செய்திருந்தார்.

எனினும், வவுனியா மேல் நீதிமன்றின் தண்டனைத் தீர்ப்பை மேல் முறையீட்டு நீதிமன்றமும் மீளுறுதிப்படுத்தி வழக்கை முடிவுறுத்தியது.

இறுதியாக, 2017ஆம் ஆண்டு வழக் கின் தீர்மானத்தை மீளவும் உச்ச நீதி மன்றில் மேல் முறையீடு செய்த சதீஸ்குமார், நீதி நிவாரணத்தைக் கோரி காத்திருந்தார்.

## மீண்டும் வாகன இறக்குமதிக்கு அனுமதி கோருகின்றது சங்கம்



வாகன இறக்குமதிக்கு மீண்டும் அனுமதி வழங்குமாறு இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வாகன இறக்குமதி தொடர்பில் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், அதற்கு திருப்தி கரமான பதில் கிடைக்கவில்லை எனவும், பயன்படுத்திய வாகன விற்பனை சந்தைக்கு நிவாரணம் கிடைக்கும் வகையில் கடன் வட்டி வீதத்தை குறைப்பதாக மத்திய வங்கி ஆளுநர் உறுதியளித்தார் எனவும் சங்கம் கூறுகிறது.

பயன்படுத்திய வாகனங்களுக்கான வட்டி குறைக்கப்பட்டால், பயன்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கான சந்தையை மேலும் பராமரிக்க முடியும் என்றும் இலங்கை வாகன இறக்குமதி யாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## போதிய நிதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்போதைய எல்லை நிர்ணய நடவடிக்கை யின் மூலம் தொகுதிகள் மற்றும் உறுப்பினர் களின் எண்ணிக்கையை குறைத்த பின்னர் புதிய தேர்தல் முறை எப்படி இருக்கும் என்றும் ஹெட்டியாராச்சி பிரதமரிடம் வினவியுள் ளார்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 வீதமாக குறைக்கும்போது இளைஞர், பெண் ஒதுக்கீட்டுக்கு தலா 25வீதம் ஒதுக்கப்படுமா என்றும் ரோஹன ஹெட்டியாராச்சி, பிரதமரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

## மீளாய்வுக் கூட்டம்



கிளிநொச்சி மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயும் திட்ட மீளாய்வுக் குழுக் கூட்டம் வியாழக்கிழமை இடம்பெற்றது

கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் காலை 10 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு ம ண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது அரச சார்பற்ற நிறுவனங்களினால் தேசிய செயலகத்தி ன் அனுமதியுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற 18 செயற்றிட்டங்களின் தற்போதைய நிலை, அவற்றின் முன்னேற்றங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டன.

திட்டங்களை நடைமுறைப்படுத்து-ம்போது ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகளுடன் ஆராயப்பட்டது.

கல்வி, சுகாதாரம், விழிப்புணர்வு நடவடிக்கைகள், வாழ்வாதாரம், மீள்குடியேற்றம்,உலருணவு, சுயதொழில் ஊக்குவிப்பு, தொழில் வழிகாட்டல், கிராமிய அமைப்புக்களை வலுப்படுத்தல், நன்னீர் மீன் வளர்ப்பு போன்றன பல்வேறுபட்ட துறைசார்ந்து அரசசார்பற்றநிறுவனங்களால் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இக் கலந்துரையாடலில் மேலதிக ம ாவட்டச் செயலர், மேலதிக மாவட்டச் செயலர் (காணி), அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகத்தின் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர், திட்டமிடல் பணிப்பாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர், உதவி மாவட்ட செயலாளர், பூநகரி பிரதேச செயலக உதவிப்பிரதேசசெயலாளர், மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கரைச்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், குறித்த திட்டங்களுடன் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாவட்ட இணைப்பாளர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் மாவட்ட இணைப்பாளர்கள், பிரதிநிதிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தார்கள்.



### அரச வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாடு:

# மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளுக்கு சமுகமளிக்கத் தவறிய சுகாதாரத்துறை அதிகாரிகள்!

நாட்டிலுள்ள பல வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாடு தொடர்பாக விசாரணைகளை முன்னெடுப்பதற்காக சுகாதார அமைச்சர் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், அவர்கள் சமுகமளிக்கவில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக புதன்கிழமை முன்னெடுப்பதற்கு தீர்மானித்திருந்த விசாரணைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன எனவும் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

அண்மைக்காலமாக நாட்டிலுள்ள அரச வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாடு தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கடந்த புதன்கிழமை இது தொடர்பான முறைப்பாட்டாளர்கள் மற்றும் பிரதிவாதிகள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன் போது பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்த சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் தலைவர் ஆகியோருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த விசாரணையின் போது தீர்மானம் எடுக்கக் கூடிய மட்டத்திலான அதிகாரிகள் சமுகமளிக்காமையின் காரணமாக முறைப்பாடு தொடர்பான விசாரணை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு துரிதமாக தலையீடு செய்ய வேண்டிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக அரச வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டை காண்கிறது.

அதற்கமைய காலம் தாழ்த்தப்படாமல் அதியுயர் முன்னுரிமையளித்து இந்த மருந்து தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண வேண்டும் என்பதற்காக மேற்குறிப்பிட்டப்பட்ட அதிகாரிகளுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டின் முறைப்பாட்டாளர்களான வைத்திய மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான வைத்தியர்களின் தொழிற்சங்க சம்மேளனம் மற்றும் இலங்கை வைத்திய சங்கம் என்பன காணப்படுகின்றன.

# தீர்வின்றேல் தொடர் வேலை நிறுத்தம்

## வைத்தியர் ரவி குமுதேஷ் தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டின் பின்னராவது அரசாங்கம் எமது கோரிக்கைகளுக்கான தீர்வை வழங்க வேண்டும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி தீர்வு வழங்கப்படாவிட்டால், அதன் பின்னர் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோம் என்பதில் மாற்றுக்கருத்தில்லை என நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் ஒன்றியத்தின் தலைவர் வைத்தியர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

இந்த அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு மக்களின் முழுமையான ஒத்துழைப்பு கிடைக்கப் பெறுவதாகக் காண்பிக்கப்படுகிறது.

ஜனாதிபதியும், ஜனாதிபதி ஊடகப்பிரிவும் பொய்யான தகவல்களை வெளியிட்டு மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றனர்.

மக்களுக்கு உண்மையான தகவல்களை வழங்க வேண்டிய தளமான ஜனாதிபதி ஊடகப்பிரிவு போலிச் செய்திகளை வெளியிடுவதைத் தவிர்த்து, பொறுப்புடன் செயற்படவேண்டும்.

கடந்த சில தினங்களாக இடியமின் இந்நாட்டின் ஜனாதிபதியாகியுள்ளதைப் போன்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு செயற்பட்டுக்கொண்டிருக்கிறது.

எவ்வாறிருப்பினும், அரசாங்கத்துக்கு மேலும் 7 நாள்கள் கால அவகாசத்தை வழங்குகின்றோம்.

எதிர்வரும் 20 ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்துடன் பணிப்பாளர் மட்ட இணக்கப்பாட்டை எட்ட முடியும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய அதன் பின்னராவது, அதாவது எதிர்வரும் 22 ஆம் திகதி எமது கோரிக்கைகளுக்கான தீர்வை வழங்குமாறு வலியுறுத்துகின்றோம். அவ்வாறில்லையெனில், 23 ஆம் திகதி முதல் மக்களையும் இணைத்துக்கொண்டு தொடர்ச்சியான வேலை நிறுத்த போராட்டத்திலும், ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபடுவோம் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. – என்றார்.

# 12 வயது மாணவியுடன் இருந்த 32 வயது நபர்

## வீரபுர பிரதேச காட்டில் கைது

வீரபுர பிரதேசத்தில் உள்ள காட்டுப் பகுதியில் 12 வயதுடைய பாடசாலை மாணவியொருவருடன் இருந்த 32 வயதுடைய நபரொருவர் சந்தேகத்தின் பேரில் சாலியவெள பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபருடன் இருந்த சிறுமியான மாணவியும் பொலிஸாரின் பொறுப்பில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

வீரபுர பகுதியில் உள்ள காட்டுப்பகுதிக்குச் சென்ற நபர் ஒருவர் இவர்கள் இருவரையும் காட்டுப் பகுதியில் கண்டு பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே பொலிஸார் குறித்த இடத்துக்கு சென்றுள்ளனர்.

இதன்போது கைதுசெய்யப்பட்டவர் கிரிபாவ பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவர் ஆவார். அத்துடன் குறித்த மாணவி ராஜாங்கனை பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்று வருவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகான ஜனாதிபதி ரனிலால் மாத்திரமே முடியும்!

## மஹிந்தானந்த அபரிமித நம்பிக்கை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியும். தற்போதைய நிலையில் அமைச்சரவையை மறுசீரமைப்பது முறையற்றது, அரசியல்வாதிகளும் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை என்னை விடக் கடுமையாக விமர்சித்தவர்கள் கிடையாது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியமையைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவுசெய்யும் போது நான் பாரிய நெருக்கடிகளுக்கு உள்ளானேன்.

அரசியல் காரணிகளுக்கு முன்னுரிமை வழங்காமல், நாடு என்ற ரீதியில் தீர்மானம் எடுக்க வேண்டும் எனக் கருதி அவருக்கு ஆதரவாக வாக்களித்தேன்.

கடந்த ஆண்டு சமூகக் கட்டமைப்பின் நிலைமைக்கும், தற்போதைய நிலைமைக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே தீர்வு காண முடியும். கடந்த ஏழு மாத காலத்துக்குள் பொருளாதார ரீதியில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுத்த தீர்மானங்களை பலவீனப்படுத்துவதற்காகவே தொழிற்சங்கத்தினர் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

தற்போதைய நிலையில் அமைச்சரவையை மறுசீரமைப்பது அவசியமற்றது. பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களில் உள்ளவர்களைக் காட்டிலும் அமைச்சு பதவி வகிக்க எனக்குத் தகுதி உள்ளது. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அரசியல்வாதிகளும் விட்டுக்கொடுப்புடன் செயற்படவேண்டும். – என்றார்.

# சீதுவை வீட்டில் திருடிய முன்னாள் கான்ஸ்டபிள்

## கைதாகி மறியலில்

சீதுவை, கொடுகொட பிரதேச வீடு ஒன்றில் 32 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடினார் எனக் கூறப்படும் முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமெரா மற்றும் கையடக்கத் தொலைபேசி பகுப்பாய்வு அறிக்கைகளை ஆராய்ந்ததில் தெரியவந்த தகவலின் அடிப்படையில் முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் மிரிஹான தலைமையக பொலிஸில் கடமையாற்றியவராவார்.

# பாடசாலை மாணவருக்கு அப்பியாச புத்தக சலுகை

## சதொச வழங்க முடிவு

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்களை சலுகை விலையில் வழங்குவதற்கு சதொச நடவடிக்கை எடுத்துள்ளதாக சதொசவின் தலைவர் சவான் காரியவசம் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு சதொச நிலையங்களில் இருந்து உயர்தர அப்பியாச புத்தகங்கள் வழங்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அரச அச்சக கூட்டுத்தாபனத்தால் உற்பத்தி செய்யப்படும் உயர்தர அப்பியாச புத்தகங்கள் நாடு பூராகவும் உள்ள 48 லங்கா சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

# நலன்புரிகொடுப்பனவிற்கான 11 லட்சம் விண்ணப்பங்களின் சரிபார்ப்பு நிறைவு!

## ஷெஹான் சேமசிங்க தகவல்



நலன்புரிக் கொடுப்பனவுக்கான 11 லட்சம் விண்ணப்பங்களின் சரிபார்ப்பு நிறைவடைந்துள்ளது. விண்ணப்பதாரர்கள் 31 ஆம் முன் சரியான தகவல்களை வழங்கி பயன்களை இழப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்படும் நலன்புரிக் கொடுப்பனவுகளுக்காக தற்போது நடைபெற்றுவரும் தகுதியானவர்களை அடையாளங் காணும் நடவடிக்கையில் இதுவரை செயற்படுத்தப்பட்டுள்ள தகவல் கணக்கெடுப்பு மற்றும் தகவல் சரிபார்ப்பு நடவடிக்கைகளின் மூலம் பெறப்பட்ட 11 லட்சம் விண்ணப்பங்களின் தகவல் சரிபார்ப்பு நடவடிக்கை நிறைவடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஹொரன் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 334 பிரதேச செயலகங்களில் இருந்து பெறப்பட்ட 37 லட்சம் விண்ணப்பங்களின் நலன்புரி கொடுப்பனவுகளை வழங்குவதற்கான தகுதி சரிபார்த்தல் பணிகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது.

பரிசீலிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களில் அதிகளவானவை களுத்துறை மாவட்டத்துக்குரியவை எனவும் அது, 46 சதவீதம் என்று குறிப்பிட்ட அமைச்சர், பதுளை மாவட்டத்தில் 34 சதவீதமும் , காலி மாவட்டத்தில் 32 சதவீதம் என்ற அடிப்படையில் முழு நாட்டையும் உள்ளடக்கிய வகையில் இந்த 11 லட்சம் விண்ணப்பங்களின் தகவல் சரிபார்ப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தகவல் கணக்கெடுப்பு, இம்மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைவதால், தகவல் கணக்கெடுப்பு நடத்தும் அதிகாரிகளுக்கு சரியான தரவுகளை விரைவில் வழங்குமாறு அனைத்து விண்ணப்பதாரிகளையும் இராஜாங்க அமைச்சர் கோரியுள்ளார்.

அத்தோடு உரிய திகதிக்கு முன்னர் சரியான தகவல்களை வழங்கத் தவறும் விண்ணப்பதாரிகள், நலன்புரிச் சலுகைகளை இழக்க நேரிடும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஹொரன் சேமசிங்க வலியுறுத்தியுள்ளார்.



# உள்ளூராட்சித் தேர்தல் ஏப்ரல் 25 நிச்சயமில்லை!

## சாந்த பண்டாரவும் கூறுகிறார்

30 கோடி ரூபா முற்பணமாக கிடைத்தால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்புக்கான வாக்குச் சீட்டுக்களை அச்சிடலாம்.

நிதி ஒதுக்கீடு முன்னிலை பட்டியலில் தேர்தல் நடவடிக்கைகள் உள்வாங்கப்படவில்லை, ஆகவே எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறுவது நிச்சயமற்றது என ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

வெகுஜன ஊடகத்துறை அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

அரச அச்சகத் திணைக்களம் வெகுஜன ஊடகத்துறை அமைச்சின் விடயதானத்திற்குள் உள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளுக்கு மாத்திரம் 15 கோடி ரூபா செலவாகியுள்ளது, ஆனால் திறைசேரி 4 கோடி ரூபாவை இதுவரை வழங்கியுள்ளது.

நிதி மற்றும் போதிய பாதுகாப்பு வழங்கினால் வாக்குச் சீட்டு அச்சிடல் பணிகளை தொடர முடியும் என அரச அச்சகத் திணைக்கள தலைவர் திறைசேரிக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் அறிவித்துள்ளார்.

போதிய பாதுகாப்பு வழங்கத் தயார் என பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார், ஆனால் நிதி விடுப்பு தொடர்பில் திறைசேரி சாதகமான பதிலை அறிவிக்கவில்லை.

நிதி இல்லாமல் வாக்குச் சீட்டு அச்சிடல் பணிகளைத் தொடர முடியாது என அரச அச்சகத்திணைக்களம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. 30 கோடி ரூபாவை முற்பணமாக வழங்கினால் வாக்குச்சீட்டுக்களை அச்சிட முடியும்.

நிதி ஒதுக்கிடல் முன்னிலை பட்டியலில் தேர்தல் நடவடிக்கை கள் உள்வாங்கப்படவில்லை. ஆகவே எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி தேர்தல் இடம்பெறுவது சாத்தியமற்றது. – என்றார்.

# கறைபடியா தமிழர் வரலாற்றுக்குள் பௌத்தத்தைத் திணிக்காதீர்கள்!

## அங்கஜன் இராமநாதன் காட்டம்





தமிழர்களுடைய வரலாற்றைத் திரிவுபடுத்தி அதனூடாக மேற்கொள்ளப்படவுள்ள பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளை உரிய அதிகாரிகள் உடனடியாகத் தடுத்த நிறுத்த வேண்டுமென யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவு வெடியரசன் கோட்டை பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற பௌத்தமயமாக்கல் செயற்பாட்டைக் கண்டித்து வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தனது அறிக்கையில் –

வெடியரச மன்னன் யாழ்ப்பாண இராசதானிகளின் கீழ் கி.மு. 200ஆம் ஆண்டுகளில் நெடுந்தீவு மற்றும் காரைநகர் பகுதிகளை ஆட்சி செய்த சிற்றரசன் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை.

இந்நிலையில் வெடியரசன் கோட்டையின் எச்சங்களை பௌத்ததாதுகோபுர எச்சங்களாகச் சித்திரித்து மேற்கொள்ளப்படவுள்ள பௌத்தமயமாக்கல் செயற்பாட்டுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

நெடுந்தீவு தமிழர்களுடைய வரலாற்றை பறைசாற்றும் தலைசிறந்த சுற்றுலாத்தளம்.

இந்நிலையில் அங்கு திட்டமிட்டு பௌத்தமயமாக்கல் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

கோட்டை மற்றும் மாவிலி இறங்குதுறைப் பகுதிகளில் பிரதேசசபையின் அனுமதி இன்றி சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் நாட்டப்பட்டுள்ள விளம்பரப் பலகையை அகற்றி கோட்டையின் பாரம்பரியத்தையும் –வரலாற்றையும் பேண உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கறைபடியாத வீரத் தமிழர் வரலாற்றுக்குள் பௌத்தத்தை திணிக்கும் செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். அதிகாரிகள் இனங்களுக்கிடையில் விரோதங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர்.

நாட்டுமக்களுக்குள் குரோதங்களை ஏற்படுத்திவிட்டு ஒருபோதும் பொருளாதார மீட்சியைப் பெற முடியாது என்பதை உரிய தரப்பினர் உணர்ந்துகொள்ள வேண்டும். – என்றுள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசு பதிலளிக்கவேண்டும்

**தேர்தலை நடத்த போதிய நிதி இல்லை என்று கூறிக்கொண்டு அதனை எப்படியாவது இந்த வருடத்தில் நடத்தாமல் விடுவதற்குத் தீவிரமாக முயற்சித்து வருகின்றனர் ஆட்சியாளர்கள். தோல்விப் பயம் காரணமாகத் தேர்தலை நடத்த அரசு அஞ்சுகின்றது என்று எதிர்க் கட்சிகள் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வந்தாலும் நிதி இன்மைதான் முழுக் காரணம் என்று அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஆட்சித் தரப்பின் ஏனைய தலைவர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.**

**தேர்தலை எதிர்கொள்வதற்குத் தாம் அஞ்சவில்லை என்றும், தேர்தல் நடந்தால் தாமே வெற்றிபெறுவோம் என்றும் ரணில் விக்கிரமசிங்கவுடைய ஆட்சியைத் தாங்கி நிற்கும் பொது ஜன பெரமுன தொடர்ந்து மீண்டும் மீண்டும் கூறி வருகின்றது. இந்த நிலையில்தான், வேறு ஏதாவது ஒரு தரப்பு தேர்தலுக்கான நிதியைப் பெற்றுத் தந்தால் தேர்தலை நடத்த ஆட்சியாளர்கள் தயாராக இருக்கிறார்களா என்கிற கேள்வியைத் தலைமை அமைச்சர் (பிரதமர்) தினேஸ் குணவர்த்தனவிடம் எழுப்பியுள்ளார் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கைக் குழுவின் (பவ்ரல்) தலைவர் ரோஹன ஹெட்டியாராச்சி.**

**தினேஸ் குணவர்த்தனவுக்கு இது தொடர்பில் அவர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளுக்கான அமைச்சர் என்கிற வகையில் ரோஹன இந்தக் கேள்வியை அவரிடம் கேட்டுள்ளார். உண்மையில் நிதிப் பற்றாக்குறைதான் தேர்தலை நடத்துவதற்கான அரசின் பிரச்சினை என்றால் இந்தக் கேள்விக்கு ஆட்சியாளர்கள் பதிலளிக்கவேண்டும்.**

**அப்படி ஒருபோதும் ஆட்சித் தரப்பில் இருந்து பதில் வராது என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம். ஏனெனில் நிதி இன்மை என்பது தேர்தலை நிறுத்துவதற்கான ஒரு சாட்டுத்தானே தவிர, உண்மையான காரணமல்ல. போரால் எழுச்சி பெற்ற ராஜபக்ச குடும்பத்தினர் பொருளாதார நெருக்கடியால் வீழ்ச்சியடைந்தனர். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அதிகாரத்துக்கு வந்தவரான ரணில் விக்கிரமசிங்க, அதே பொருளாதார நெருக்கடியால் தானும் வீழ்ந்துவிடுவதற்குத் தயாரில்லை என்பதாலும், ஏற்கனவே தன்னால் அதலபாதாளத்திற்குள் வீழ்ந்து கிடக்கும் ஐக்கிய தேசியக் கட்சியைத் தூக்கி நிறுத்தும் தேவை இருப்பதாலும் தேர்தலை நடத்துவதற்கான சாத்தியங்கள் மிக மிகக் குறைவானவையே.**

**எதிர்க் கட்சிகள் எவ்வளவு தலைகீழாக நின்று பார்த்தாலும் தேர்தலை அடுத்தடுத்த வருடங்களுக்கு ஒத்திப்போடும் திட்டம் ஒன்றுதான் ரணில் வசம் இருக்கின்றது. அதனால் நிதியைத் தந்தால் நீதி கிடைக்குமா என்கிற ரோஹனவின் கேள்விக்கு பதில் கிடைக்காது என்றே எதிர்பார்க்கலாம் உறுதியாக.**

# கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்காத கட்சிகளின் அங்கீகாரம் நிறுத்தப்படும்

## தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட கட்சியின் கணக்கு வெளிப்படுத்தல் அறிக்கையை 14 நாள்களுக்குள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்காவிடின் கட்சியின் அங்கீகாரம் நீக்கப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தலைமையில் ஆணைக்குழு வியாழக்கிழமை 10 மணியளவில் கூடியது.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களான எஸ்.பி. திவாரத்ன, எம்.எம்.மொஹமட் மற்றும் கே.பி.பி.பதிரன ஆகியோர் கலந்துகொண்டனர்.

1991 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தின் 8(4) அத்தியாயத்துக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் தமது கணக்காய்வு அறிக்கையை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்க வேண்டும்.

இதற்கமைய 2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகளிடம் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பலமுறை ஆணைக்குழுவால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய இதுவரை கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகள் இன்று (வெள்ளிக்கிழமை) இருந்து 14 நாள்களுக்குள் கட்சியின் கணக்காய்வு அறிக்கையை சமப்பிக்குமாறு பதிவு தபால் ஊடாக அறிவிக்க ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இந்த அறிவிப்புக்கு அமைய கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகள் தொடர்பாக நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தின் 9(3) அத்தியாயத்தின் பிரகாரம் அந்தக் கட்சியின் அங்கீகார உரித்துரை நீக்கப்படும் என ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

# புத்தூரில் பொது நூலகத்திற்கு ரூபாய் 30 மில்லியன் ஒதுக்கீடு

## வலி. கிழக்கு சபை நிதியிலிருந்து வழங்கப்பட்டது



வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலய வளாகத்தில் புத்தூர் உப அலுவலகத்திற்கான நவீன பொது நூலகத்தினையும் கேட்போர் கூடத்தினையும் அமைப்பதற்கு சபை நிதியில் 30 மில்லியன்கள் ஒதுக்கப்பட்டு வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன என்று வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு வியாழக்கிழமை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் நடைபெற்றது. அதில் இவ் அறிவிப்பினை வெளியிட்டார். அவர் மேலும், எமது சபையின் இவ்வாண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் 6 மில்லியன்களை ஒதுக்கப்பட்டுள்ளன. அதுபோதாத நிலையில் கடந்த மாதம் முடிவுறுத்தறுத்தப்பட்ட இறுதிக் கணக்குகளின் பிரகாரம் 30 மில்லியன்கள் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. அரச நிறுவனங்கள் பெப்ரவரி மாத இறுதியிலேயே இந் நிதியினை இறுதியாக அடையாளப்படுத்த முடியும். இந் நிதியைப் பயன்படுத்தி ஏற்கனவே சபையில் பெறப்பட்ட தீர்மானத்திற்கு அமைய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. முதற்கட்டமாக நிலம் ஒதுக்கப்பட்டு அமைப்பு வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. அரச படிமுறைகளின்படி அங்கு நூலகம் மற்றும் கேட்போர் கூடத்தை அமைப்பதற்கான பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

மேலும் எம்மால் ஒதுக்கப்பட்டுள்ள இந் நிதி வலிகாமம் பிரதேச மக்களின் பணம் என்பதையிட்டு பெருமையடைகின்றோம். நீண்ட காலமாக புத்தூர் உப அலுவலகத்திற்கு உட்பட்டு சிறந்த நூலகக் கட்டுமானத்தினை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்த நிலையிலும் நிதியை குறித்த விடயத்திற்கு ஒதுக்குவதில் பல கஸ்டங்கள் நிலவின. எனினும் தற்போது சபையின் இறுதிக்காலத்தில் ஏனும் இத்திட்டத்திற்கான நிதியை விடுவிக்க முடிந்தது என்பதையிட்டு திருப்தியடைகிறேன் – என்றார்.

# தேர்தலை நடத்த ஜெயதாஸின் யோசனை இது

தென்மராட்சி, மார்ச் 17

அப்பாவி மக்கள் மீது வரிச் சுமையை திணிக்காது வெளிநாட்டு நிறுவனங்களுக்கு உரிய வரிகளை விதிப்பதன் ஊடாக உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு தேவையான நிதியை திரட்ட முடியும் என சாவகச்சேரிப் பிரதேசசபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் தெரிவித்தார்.

பிரதேசசபையின் மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் தெரிவித்ததாவது:

நாட்டில் தேர்தல் நடத்துவதாக திகதி அறிவித்துவிட்டு நிதி இல்லாமையை காரணம் காட்டி தேர்தலை பிற்போட்டு வருகின்றனர்.

அப்பாவி மக்கள் மீது அளவுக்கு அதிகமாக வரிகள் திணிக்கப்படுகிறது.

இதனால் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் வெகுவாக அதிகரித்து மக்கள் வாழ முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இருப்பினும் எமது நாட்டில் வெளிநாட்டு நிறுவனங்களுடைய உற்பத்திகளுக்கு உரிய விதத்தில் வரி அறவிடப்படுவதில்லை.

வரி அதிகரிப்பும் அவர்களுக்கு இல்லை.

பிரித்தானியா மற்றும் அமெரிக்க நாடுகளின் சிகரெட் கம்பனிகளின் உற்பத்திகள் மீது முறையான வரிகள் விதிக்கப்படவில்லை.

இதனால் எமது நாடு வருடத்திற்கு 50 பில்லியன் ரூபாவை இழக்கின்றது.

வெளிநாட்டு உற்பத்திகள் மீது உரிய வரிகளை அறவிடுவதன் மூலம் தேர்தலுக்குத் தேவையான பணத்தைவிட அதிக பணத்தை ஈட்ட முடியும்.

வேட்புமனுத்தாக்கலின் பின்னர் தேர்தல் பிற்போடப்பட்டிருப்பதனால் தேர்தலுக்கு முகம்கொடுக்கவுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே தேர்தல் பிற்போடப்பட்டுள்ளமையை இந்த சபை கண்டிப்பதுடன்–

எனது கருத்தினையும் சபைத் தீர்மானமாக நிறைவேற்றி அதன் பிரதிகளை ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர் உள்ளிட்டோருக்கு அனுப்பி வைக்க பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென மேலும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.



# தேர்தல் ஊடாக மக்கள் இறையாண்மையை உறுதிப்படுத்த ஐ.நாவின் ஈடுபாடு அவசியம்!

## சஜித் பிரேமதாஸ வலியுறுத்து

தேர்தல்களை நடத்துவதன் ஊடாக இலங்கை மக்களின் இறையாண்மை அதிகாரத்தை உறுதிப்படுத்தும் முகமாக ஐக்கிய நாடுகள் சபையின் கூடிய ஈடுபாட்டின் அவசியத்தை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அசுசா குபோடா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோருக்கிடையிலான விசேட சந்திப்பொன்று வியாழக்கிழமை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்றது. இந்த சந்திப்பின் போதே எதிர்க்கட்சி தலைவர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்குத் தனது பாராட்டுக்களையும் எதிர்க்கட்சி தலைவர் இதன் போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# உத்தேச மத்திய வங்கி சட்டம் ஆளுநருக்கு சுதந்திரம் அதிகம்

## என்கிறார் நந்தலால்



உத்தேச மத்தியவங்கி சட்டம் காரணமாக மக்கள் ஆதரவற்ற கடினமான தீர்மானங்களை எடுக்கவேண்டியிருக்கும் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

மத்திய வங்கிக்கு சுயாதீனத்தை வழங்கும் உத்தேச மத்தியவங்கி சட்டம் பொறுப்புக்கூறலை அதிகரிக்கும் எனத் தெரிவித்துள்ள மத்திய வங்கி ஆளுநர் விலை நெகிழ்ச்சி தன்மை தொடர்பில் மக்கள் ஆதரவற்ற ஆனால் அவசியமான நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய விதத்தில் மத்திய வங்கியை வலுப்படுத்தும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய வங்கியை மக்கள் ஆதரவற்ற ஆனால் முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் விதத்தில் வலுப்படுத்துவதே இந்த உத்தேச சட்டத்தின் நோக்கம் என மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இந்த புதிய சட்டமூலத்தின் மூலம் மத்திய வங்கி ஆளுநர் சுதந்திரமாக செயற்படமுடியும் எனவும் தெரிவித்துள்ள நந்தலால் வீரசிங்க, நிதி அதிகாரிகளின் தலையீடு இன்றி மத்திய வங்கி ஆளுநர் சுயாதீனமாக முடிவுகளை எடுக்க முடியும். அந்த முடிவுகளை ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் விருப்பத்தின் அடிப்படையில் மாற்ற முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# மலாவியில் கடும் புயல் 326 பேர் உயிரிழப்பு



ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான மலாவியில் ஏற்பட்ட புயல் மற்றும் கனமழைக்கு இதுவரை 326 பேர் உயிரிழந்தனர்.

புயல் பாதிப்பு குறித்து மலாவி தேசிய பேரிடர் மேலாண்மை கூறும்போது, பிரெட்டி புயலால் மலாவியின் தென்பகுதி மோசமாக பாதிப்படைந்துள்ளது.

பல மாவட்டங்கள் புயலால் ஏற்பட்ட வெள்ளத்தினால் கடும் பாதிப்பைச் சந்தித்துள்ளன. புயலுக்கு இதுவரை 326பேர்உயிரிழந்துள்ளனர்; பலர் காணாமல் போயுள்ளனர்.

அவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எல்லாமே பறிபோனது. காய்கறி விற்று சிறிய அளவில் வியாபாரம் செய்து வந்தேன். எனது கணவர் 2014 ஆம் ஆண்டே இறந்துவிட்டார்.

இந்த கடை மூலம் தான் எனது குழந்தைகளைகாப்பாற்றிவந்தேன். புயல் அனைத்தையும் அழித்துவிட்டது என்று தெரிவித்தார்மலாவியைச் சேர்ந்த ஒரு பெண்.

பிரெட்டி புயல் மலாவியில் மட்டுமல்லாது, மொசாம்பிக், மடகாஸ்கர் ஆகிய நாடுகளிலும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், புயலினால்ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சமாளிக்க சர்வதேச சமூகத்தின் உதவியை கோரி இருக்கிறார் மலாவி அதிபர் லாசரஸ்.

இதுகுறித்து அவர் கூறும்போது,

தற்போது மழை நின்றிருக்கிறது. புயல்பாதித்தஇடங்களில் உணவுவழங்ககூடுதலான உலங்குவானூர்திகள் தேவை என்று தெரிவித்துள்ளார்.

## ஹெலி விபத்தில் இந்தியாவில் இரண்டு வானோடிகள் இறப்பு

இந்தியாவின் அருணாசல பிரதேச மாநிலம், மேற்கு கமெங் மாவட்டத்தில் வான்படையயின் 'சீட்டா' ரக உலங்கு வானூர்தி வியாழக்கிழமை விபத்துக்குள்ளானது. இதில், 2 வானோடிகள் உயிரிழந்தனா.

சம்பவம் குறித்து, பாதுகாப்புத் துறை செய்தித் தொடாபாளா தெரிவித்ததாவது:

அஸ்ஸாமின் சோனித்பூரில் இருந்து அருணாசல பிரதேசத்தின் தவாங் பகுதிக்கு 2 விமானிகளுடன் 'சீட்டா' ரக ஹெலி வியாழக்கிழமை புறப்பட்டு சென்றது. ஆனால், மோசமான வானிலை நிலவியதால், தவாங் செல்லாமல் சோனித்பூருக்கே ஹெலி மீண்டும் புறப்பட்டது.

அப்போது, திடீரென கட்டுப்பாட்டு அறையுடனான அந்த ஹெலியின் தொடாபு துண்டிக்கப்பட்டது.

பின்னா, மேற்கு கமெங் மாவட்டத்தின் திராங் அருகேயுள்ள மண்டலா பகுதியில்ஹெலிவிபத்துக்குள்ளானது தெரியவந்தது. இதுகுறித்து கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில், இராணுவம், இந்திய-திபெத் எல்லைக் காவல் படையினா உள்பட 5 மீட்புக் குழுக்கள் அங்கு விரைந்தன. இந்த விபத்தில், லெப்டினன்ட் கோ்னல் வி.வி.பி.ரெட்டி, துணை வானோடி ஏ.ஜெயந்த்ஆகியஇருவரும்உயிரிழந்து விட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது. விபத்துக்கான காரணத்தை கண்டறிய விசாரணை தொடங்கப்பட்டுள்ளது – என்றாா். ஹெலிக்கொப்டா விழுந்து நொறுங்கி, தீப்பிடித்ததாக திராங் கிராம மக்கள் தெரிவித்தனா.

சம்பந்தப்பட்ட பகுதி, தொலைபேசி இணைப்புவசதி இல்லாததாகும். அங்கு கடுமையான பனிமூட்டம் நிலவியதாக காவல் துறை கண்காணிப்பாளா ரோஹித் ராஜ்பீா சிங் தெரிவித்தாா்.

## அமெ. ஆளில்லா விமானம் மீதான தாக்குதல் ஆதாரம் வெளியிடப்பட்டது

உக்ரைன் அருகே கருங்கடல் பகுதியில் தங்களது ஆளில்லா உளவு விமானம் (ட்ரோன்) ரஷ்ய போா விமானங்களால் இடைமறித்து வீழ்த்தப்பட்டதற்கான ஆதாரத்தை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

இது குறித்து அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:

கருங்கடல் பகுதியில் அமெரிக்க ஆளில்லா உளவு விமானத்தை ரஷ்ய போா விமானங்கள் இடைமறித்து வீழ்த்தியதாகக் கூறப்படுவது தொடாபான காணொலியை, பாதுகாப்புத் துறை தலைமையகமான பென்டகன் வியாழக்கிழமை வெளியிட்டது.

42 விநாடிகளுக்கு நீளும் அந்த விடியோவில், ரஷ்யாவின் போா விமானமொன்று ஆளில்லா விமானத்தின் அருகே வந்து தனது எரிபொருளைக் கொட்டிச் செல்லும் காட்சி இடம் பெற்றுள்ளது.

உளவு விமானத்தில் இருக்கும் படப்பிடிப்பு கருவிகளின் பார்வையை மறைக்கும் நோக்கில் எரிபொருள் கொட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது.

அடுத்ததாக, அதே ரஷ்ய விமானமோ அல்லது அதைப் போன்ற மற்றொரு விமானமோ மீண்டும் ஆளில்லா விமானத்தின் அருகே வந்து உயரப் பறந்து செல்லும் காட்சி காணொலியில் இடம் பெற்றுள்ளது.

அவ்வாறு வந்து செல்லும்போது ஆளில்லா விமான இறக்கையில் சுழலும் விசிறி சேதமடைந்ததாக பென்டகன் தெரிவித்தது.

எனினும், அந்தச் சம்பவத்துக்கு முன்னும், பின்னும் நடைபெற்ற காட்சிகளை பென்டகன் வெளியிடவில்லை என்று அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

முன்னதாக, அமெரிக்க பாதுகாப்புத் துறை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:

கருங்கடலுக்கு மேலே சாவதேச வான் எல்லையில் எங்களின் எம்க்யூ9 ரீப்பா வகை ஆளில்லா விமானம் தனது வழக்கமான சுற்றுக்காவல் பணியில் செவ்வாய்க்கிழமை ஈடுபட்டிருந்தது. அப்போது அந்த விமானத்தை ரஷ்ய விமானப் படைக்குச் சொந்தமான இரு 'எஸ்யு-27' போா விமானங்கள் இடைமறித்து, அதன் இறக்கையிலுள்ள சுழலும் விசிறிகளைச் சேதப்படுத்தின.

இதனால் அந்த ஆளில்லா விமானத்தால் அதற்கு மேல் பறக்க முடியாத நிலை ஏற்பட்டது.

அதையடுத்து, அந்த விமானத்தை கடலில் விழச் செய்தோம்.

ரஷ்ய விமானிகளின் 'பாதுகாப்பற்ற, ஆபத்தான, பணிநோத்தியற்ற' செயல் குறித்து அந்த நாட்டு அதிகாரிகளிடம் கவலை தெரிவிக்கப்பட்டது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டிருந்த அறிக்கையில், 'சாவதேச வான் எல்லையில் அமெரிக்க ஆளில்லா விமானத்தை இடைமறித்து சேதப்படுத்தியதன் மூலம் சாவதேச சட்டங்களை ரஷ்யா மிகத் துணிகரமாக மீறியிருக்கிறது' என்று சாடப்பட்டிருந்தது.

## திருமணங்களும் இல்லை குழந்தைகளும் கிடையாது

### தென்கொரியா எதிர்கொள்ளும் சமூகச் சிக்கல்



தென்கொரியாவில்கடந்த ஆண்டில் திருமணங்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. இதனால், அங்கு பிறப்பு விகிதமும் கணிசமாகக் குறைந்து வருகிறது.

தென் கொரியாவின் தேசிய புள்ளியியல் அலுவலகம் வியாழக்கிழமை வெளியிட்ட தரவுகளின்படி, 2022-இல் சுமாா் 1,91,700 திருமணங்கள் நடந்தன. இது முந்தைய ஆண்டைவிட 0.4% குறைவு. திருமணங்கள் குறைந்து வருவதால் குழந்தைகள் பிறப்பு விகிதமும் படிப்படியாக குறைந்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2020ம் ஆண்டில், தென் கொரியாவில் பிறந்தவர்கள் எண்ணிக்கையை விட இறந்தவர்கள் எண்ணிக்கை அதிகமாகப் பதிவாகியிருக்கிறது. இதனைத் தொடர்ந்து திருமணம் மற்றும் குழந்தை பெறுவதை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை தென் கொரியா அறிவித்தது. குறிப்பாக, குழந்தைகளைப் பராமரிக்கும் செலவுக்கான தொகையை அரசு வழங்கும் என்றும் கடந்த ஆண்டு தென் கொரியா அறிவித்தது. எனினும், தென் கொரியாவில் திருமணமும், குழந்தைப் பிறப்பு விகிதமும் இறங்குமுகத்தில் உள்ளதால் அரசு செய்வதறியாமல் திகைத்து வருகிறது.

உலகிலேயே குழந்தைப் பிறப்பு விகிதம் மிகக் குறைவாக இருப்பது தென் கொரியாவில்தான். தென் கொரியப்பெண்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் குழந்தை பெற்றுக்கொள்ளும் விகிதம் ஆண்டுக்கு 1.05தான். மக்கள் தொகையைத் தக்கவைப்பதற் குத் தேவைப்படும் 2.1எனும் விகிதத்துடன் ஒப்பிடும்போது இது மிக மிகக் குறைவு. வேலைப் பளு, பெண்களுக்குக் குறைவான சம்பளம், கடுமையாக உயர்ந்துவரும் விலைவாசி என பல்வேறு காரணங்களால், தென் கொரிய இளம் தலைமுறையினரிடம் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளும் ஆர்வம் குறைந்துவருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கொலம்பியாவில் 21 பேர் சுரங்க வெடி விபத்தில் சாவு

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் சுரங்க வெடி விபத்தில் 21 தொழிலாளாகள் உயிரிழந்துள்ளனர் என்றறு அதிகாரிகள் வியாழக்கிழமை அறிவித்தனா.

அந்த நாட்டின் சுடசாயுசா நகருக்கு அருகேயுள்ள சுரங்கத்தில் செவ்வாய்க்கிழமை இரவு திடீரென வெடிவிபத்து ஏற்பட்டது. இதில் சுரங்கத்தில் வாயில்கள் மூடின.

இந்த நிலையில், 2 நாள்களாக இடைவிடாமல் நடைபெற்ற மீட்புப் பணிகள் நிறைவடைந்த நிலையில், இந்த விபத்தில் 21 தொழிலாளாகள் உயிரிழந்தனர் என்று அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

கொலம்பியாவில் நிலக்கரி மற்றும் தங்கச் சுரங்கங்களில் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு மட்டும் அங்கு 117 சுரங்க விபத்துகள் பதிவு செய்யப்பட்டன.





## மிக சிறந்த விமான நிலையங்களின் பட்டியலில் சிங்கப்பூருக்கு முதலிடம்

உலகின் தலைசிறந்த விமான நிலையங்களின் பட்டியலில் சிங்கப்பூர் நாட்டின் ாங்கி விமான நிலையம் முதலிடம் பெற்றுள்ளது.

கொரோனா தொற்றுக்குப் பிறகு விமானப் பயணங்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

பல்வேறு விமான நிறுவனங்களும் பயணிகளை ஈர்க்க புதிய புதிய சலுகைகளையும் அறிவிப்புகளையும் வெளியிட்டு வருகின்றன.

இந்நிலையில் உலகின் தலைசிறந்த விமான நிலையங்களின் பட்டியலை ஸ்கைடிராக்ஸ் எனும் நிறுவனம் பட்டியலிட்டுள்ளது.

2023ஆம் ஆண்டின் தலைசிறந்த விமான நிலையங்களின் பட்டியலில் சிங்கப்பூரின் ஷாங்கி விமான நிலையம் முதலிடம் பெற்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து தோஹா விமானநிலையமும், டோக்கியோவின் ஹனீடா விமான நிலையமும், சியோலின் இங்கியோன் விமான நிலையமும், பாரீஸின் சார்லஸ் டி கெல்லி விமான நிலையமும் இடம் பெற்றுள்ளன.

இவைகளைத் தொடர்ந்து இஸ்தான்புல், முனிச், சூரிச், நரிட்டா உள்ளிட்ட விமான நிலையங்கள் சிறந்த விமான நிலையங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.